பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 16 திங்கட்கிழமை (29-04-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:155

# பாலசிங்கம் பயணம் செய்த கடல் விமானம் தாக்குதலுக்கு இலக்காகுவதிலிருந்து தப்பியது!

கொழும்பு,ஏப்.29

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இரணைமடுக் குளத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற கடல் விமானம், இலங்கை விமானப் படையின் தாக்குதலுக்கு இலக்காகும் சந்தர்ப்பத்திலிருந்து அருந்தப்பில் தப்பியதாகத் தற்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

நல்லவேளையாக அன்ரன் பாலசிங்கமும் அவரது மனைவி அடேல பாலசிங்கமும் பயணம் செய்த விமானம் சுட்டுவீழ்த்தப்படாமல் தப்பியதாக 'கல்ப் நியூஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இந்தச் சம்பவம் குறித்து கொழும்பில் வெளியிடப்பட்ட தகவல்கள் வருமாறு:-

வன்னிக்கு பாலசிங்கம் தம்பதியர் கடந்த மாதம் வந்தபோது அவர்களை மாலைதீவில் இருந்து ஏற்றி வந்த விமானம் நாட்டின் மேற்குக் கரையூடாக - மன்னார் குடாப்பகுதி வழியாக நாட்டுக்குள் பிரவேசித்து, இரணைமடுக்குளத்தில் இறங்கியது.

கடந்த புதனன்று திரும்பிப் போகும் போதும் அதேவழியில் அந்த விமானம் செல்லும் என அரசுத் தரப்பு எதிர்பார்த்தது.

இதன் காரணமாக நாட்டின் கிழகக் கரையிலோ அல்லது ஏனைய பகுதிகளிலோ உள்ள பிரதான படைத் தளங்களுக்கு அதுபற்றி முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்கிடையில், கிழக்கு சாலைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட நான்கு படகுகளை புலிகளினுடையவை என்று சந்தேகத்தில் கடற்படைக் கப்பல்கள் சுற்றி வளைத்து வியூகம் அமைத்துநின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ✱ எம்.பிக்கள் கட்சி மாறி வாக்களிக்கும் வாய்ப்பு
## ✱ ஜனாதிபதியின் சில அதிகாரங்கள் பறிப்பு

# அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டமூலம்

# மே 21 இல் நாடாளுமன்றத்தின் முன்!

## அமைச்சர் பீரிஸ் சமர்ப்பிப்பார்

கொழும்பு,ஏப்ரல்29

**அரசமைப்பைச் சீர்திருத்தும் சட்டமூலம் ஒன்றை அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.**

**இச்சட்டமூலம், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றை நீக்குவதாகவும் -**

**கட்சியின் முடிவுக்கு மாறாக மனச்சாட்சிப்படி நாடாளுமன்றில் ஓர் எம்.பி. வாக்களித்தால் அதற்காக அவரைப் பதவி நீக்க வழிசெயயும் தற்போதைய சட்ட ஏற்பாடுகளை முற்றாக நீக்குவதாகவும் - அமைந்திருக்கும்.**

நாடாளுமன்றம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு ஒரு வருடம் கழிந்த பின்னர் தான் விரும்பிய எந்தநேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு தற்போதைய அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

உத்தேச அரசமைப்புச் சீர்திருத்த சட்ட மூலம் இந்த அதிகாரத்தை ஜனாதிபதியிடம் இருந்து விலக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் பிரதேசத்துக்கு மேலும் 100 புலிகள் இன்று செல்வர்

யாழ்ப்பாணம்,ஏப்.29

வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் பணியாற்றுவதற்காக மேலும் நூறு விடுதலைப் புலிகள் இன்று அப் பகுதிகளுக்குள் செல்ல விருக்கின்றனர்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு மாதம் பூர்த்தியானதும் ஐம்பது விடுதலைப் புலிகளும் -

இரண்டு மாதம் ஆனதும் மேலும் நூறு விடுதலைப் புலிகளும் -

அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அரசியல் பணிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்று ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி -

யாழ்., மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு தலா முப்பது பேரும் -

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு தலா பன்னிருவரும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## தனது அணியின் எம்.பிக்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடுவார்

கொழும்பு,ஏப்.29

தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து தமது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எம்.பிக்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடவிருக்கின்றார்.

நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இந்தக் கலந்துரையாடல்கள் நடைபெறவிருக்கின்றன.

அரசமைப்புச் சட்ட சீர்திருத்த நகல நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பின்னணியில் ஜனாதிபதி இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளார். (உ-6-9)

## அரசமைப்புக் கவுன்ஸில் 9ஆம் திகதி கூடுகின்றது

கொழும்பு,ஏப்.29

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரசமைப்புக் கவுன்ஸில் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் தடவையாக கூடுகின்றது.

சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் உள்ள சபாநாயகர் அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

பொலீஸ், தேர்தல், நீதிச்சேவை பொதுநிர்வாகம் ஆகியவை தொடர்பான நிர்வாகங்களுக்குப் பொறுப்பான சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் அதிகாரம் இந்தக் கவுன்ஸிலுக்கே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6-9)

## துரை விடுவிக்கப்பட்டார்!

மட்டக்களப்பு,ஏப்.29

மட்டக்களப்பு மண்டூர் சோதனைச் சாவடியில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் மட்டக்களப்புப் பகுதி அரசியற்றுறைப் பொறுப்பாளர் துரை நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நகரப் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டு வரும் துரை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீவகம் முழுவதும் ராணுவப் பிரதேசமா? ஆட்சேபிக்கின்றனர் விடுதலைப் புலிகள்!

யாழ்.தீவகப்பகுதி முழுவதும் இராணுவப் பிரதேசம் என விவரித்து அப்பகுதிக்குள் விடுதலைப் புலிகளை அரசியல் நடவடிக்கைகளுக்காக அனுமதிக்கமுடியாது என வட பிராந்திய கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் எஸ்.பி.வீரசேகர தெரிவித்திருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் - இப்படி புலிகள் ஆட்சேபித்திருக்கிறார்கள்.

கிளிநொச்சியிலுள்ள கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகளுக்கு இது குறித்து புலிகள் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்கள்.

யாழ். தீவகப் பகுதிகள் அரச படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற போதிலும், அங்கு பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் வசித்து வருகின்றார்கள். அப்பகுதிகளில் புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிசெய்திருக்கிறது. அதனை கடற்படையினர் மறுப்பது அந்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறுகின்ற செயலாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடந்த மாதம் முதல் தொகுதியாக வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவப் பிரதேசங்களினுள் சென்ற விடுதலைப் புலிகள் தொலைத்தொடர்புக் கருவிகளையும், சயனைட் குப்பிகளையும் தம்முடன் எடுத்துச்செல்ல

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழரின் அபிலாஷைகளை முழங்கும் வகையில் கூட்டு மேதினம்

தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய தமிழ் மக்களின் அபிலாஷைகளை உரத்து முழங்கும் வகையில் எழுச்சியுடன் நாளைமறுநாள் கூட்டு மேதினம் மருதனார்மடத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இணுவிலில் இருந்து அன்று பிற்பகல் 3.30 மணிக்கு பேரணிகள் ஆரம்பமாகும் மக்களின் அவலங்களை எடுத்து இயம்பும் செயல்களைச் சித்திரிக்கும் ஊர்திகளும் பேரணியில் இடம் பெறும்.

பேரணிகளின் முடிவில் மருதனார் மடத்தில் மாபெரும் கூட்டம் இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு!, புலிகளுடன் பேசு!, நிம்மதியாகவும் கௌரவமாகவும் தொழில் புரிய இயல்புநிலையை உடனே ஏற்படுத்து! - என்று மேதினத்தில் கோஷங்கள் எழுப்பப்படவிருக்கின்றன.

மேதின ஏற்பாடுகளுக்கான ஒருங்கிணைப்பாளர்கள் இன்று மாலை 4 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள யூனியன் கல்லூரிக்கு வருகைதருவர் என்றும் -

அங்கு அவர்களைச் சந்தித்து கலந்துரையாடமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தந்தை செல்வா அன்று நினைத்தார்

# தலைவர் பிரபா இன்று சாதிக்கிறார்

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் சிவசிதம்பரம் உரை

கொழும்பு,ஏப்.29

"இலங்கையில் வாழ்கின்ற அனைத்துத் தமிழ்ப்பேசும் மக்களும் ஓரணியில் திரள வேண்டும் என்று தந்தை செல்வா அன்று நினைத்தார். தமிழினத்தின் தேசியத் தலைவரான வே.பிரபாகரன் தனது தீர்க்கதரிசன தலைமைத்துவத்தின் கீழ் இன்று அதனைச் சாதிக்கிறார்" தந்தை செல்வாவிற்கு அடுத்த படியாக தமிழர்களின் பெருந் தலைவன் நான் என்று எனக்கு முன் பேசிய ஒருவர் குறிப்பிட்டார். ஆனால நான் சொல்கிறேன் எம்தமிழினத்தின் தேசியத் தலைவன் என்றால் அது தம்பி பிரபாகரன் மட்டுதான்."

இவ்வாறு உணர்ச்சி பொங்க கூறினார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் மு.சிவசிதம்பரம்.

மறைந்த தலைவர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

"சமாதானம், சமாதானம் என்று இன்று ஆரவாரிக்கின்றோம். உண்மை நிலை என்ன? பாடசாலைகளிலும், வழிபாட்டுத் தலங்களிலும், இன்னும் ஏன் மக்களின் வீடுகளிலும் அத்துமீறலாக பட்டாளங்கள் இருந்து வருகின்றன. அவர்கள் அவ்விடங்களை விட்டு வெளியேறவேண்டும்.

இன்று தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள் என அனைவருமே எழுச்சி கொண்டு உரிமைக்குரல் கொடுக்கும சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இதுவரைகாலமும் இருந்துவந்த விரிசல் நிலை நீங்கி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் கீழ் அணி திரண்டிருக்கின்றோம். அவர்களின் உரிமைக்குரலாய் நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க நாங்கள் திட சங்கற்பம் பூண்டிருக்கின்றோம். இந்தப் பலமான தமிழர்களின் எழுச்சிக்குப் பின்னராவது, தமிழர்களை ஏமாற்ற நினைக்காது, தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நல்லதீர்வை வழங்க சிங்கள அரசும், சிங்கள மக்களும் முன்வரவேண்டும்.

எமது இளைய தலைமுறையினர் வலுக்கட்டாயமாக ஆயுதம் ஏந்திய தன் பயனாகவே இன்று எத்தனையோ படிகளைத் தாண்டி இறங்கி வந்து அரசு சமாதான முயற்சிகளில் ஈடுபடுகிறது. அன்று எங்களை ஏமாற்றியது போல் இன்று விடுதலைப் புலிகளை ஏமாற்றமுடியாது. இது கடந்த காலங்களில் அரசு கண்ட கசப்பான உண்மைகள் - இவ்வாறு கூறினார்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், பேராசிரியர். கா.சிவத்தம்பி, சட்டத்தரணிகளான க.வே.மகாதேவன், க.நீலகண்டன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தசித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் முதல்வர் ந.சிறிகாந்தா ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.



வண்ணை நாச்சிமார் ஆலயத்தில் நேற்றிரவு இடம்பெற்ற பூங்காவனத் திருவிழாவில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் அமைக்கப்பட்ட தண்டிகையில் காமாட்சி அம்மன் வலம் வரும் காட்சி.

## கல்வி அலுவலகங்கள் முன் இன்று மறியற்போராட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் மற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி இன்று காலை 7 மணி முதல் தொடர் மறியற் போராட்டத்தில் குதிக்கின்றனர்.

யாழ்.கல்வி வலய அலுவலகம் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை ஆகியமுன்பாக இடம்பெறவுள்ள இந்தப் போராட்டம் காரணமாக அவற்றின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-3-10)

## அமைச்சர் மொஹமட் இன்று யாழ். வருகிறார்

### இருதினங்கள் தங்கி பல நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்

இருநாள்கள் விஜயம் மேற்கொண்டு மேற்குப்பிராந்திய அமைச்சர் எம்.எச்.மொஹமட் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ் செயலகத்தில் இடம்பெறும் திணைக்களத் தலைவர்கள் கூட்டத்தில் பங்கு பற்றும் அமைச்சர் பிற்பகலில் யாழ். வணிகர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவிருக்கின்றார். அதைத் தொடர்ந்து மண்கும்பான், வேலணைப் பகுதியில் உள்ள பள்ளிவாசல்களுக்கு அவர் செல்வார்.

அதன் பின்னர் யாழ்.பொது நூலகம், நகரப்பகுதினைப் பார்வையிடும் அமைச்சர் மாலை 6 மணிக்கு யாழ். பெரிய பள்ளிவாசலில் இஷா தொழுகையில் கலந்துகொள்வார். பின்னர் நான் அலுவலகத்தில் முஸ்லிம் பிரமுகர்களுடன் கலந்துரையாடுவார்.

நாளை காலை நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ்.நாகவிகாரை ஆகியவற்றுக்குச் செல்லும் அமைச்சர் பின்னர் யாழ்.தகவல் தொழில் நுட்பபூங்காவுக்கு விஜயம் செய்வார். அதைத் தொடர்ந்து சாவகச்சேரி, முகமாலை ஆகிய இடங்களுக்கும் அமைச்சர் செல்வார்.

பின்னர் காரைநகர் கசூரினா பீச், மாதகல், கீரிமலை, காங்கேசன்துறை துறைமுகம் ஆகிய இடங்களுக்கும் அமைச்சர் சென்று பார்வையிடுவார். பின்னர் அமைச்சர் கொழும்பு திரும்புவார்.

அதேவேளை -

அமைச்சர் மொஹமட்டுக்கும் வணிகர்கழகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வணிகர் கழகப் பணிமனையில் இடம்பெறும் கலந்துரையாடலில் சகல வர்த்தகர்களையும் கலந்து தமது பாதிப்புக்களை எடுத்துக் கூறுமாறு யாழ். வணிகர்கழகம் கேட்டுள்ளது.

(உ-3-4-10)

## தனது தம்பி அனுராவுக்காக ஜனாதிபதி சந்திரிகா சதி!

### குற்றஞ்சுமத்துகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு,ஏப்.29

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது சகோதரர் அனுரா பண்டாரநாயக்காவின் அரசியல் முன்னேற்றதத்துக்காக சதி வேலைகளில் ஈடுபட்டு வருகிறார் என்ற தோரணையில் குற்றஞ்சாட்டியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

தமக்கும் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்கவுக்கும் நடந்த சில கருமங்களைச் சுட்டிக்காட்டியே அவர் ஜனாதிபதி மீது குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறார்.

கட்சியிலிருந்து தன்னை ஓரங்கட்டும் ஜனாதிபதியின் சதி நடவடிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டார் என்று இணையத்தளச் செய்தி ஒன்று கூறுகின்றது.

அரசின் சமாதான முயற்சிக்கு எதிராக ஜே.வி.பி. கொழும்பில் நடத்திய எதிர்ப்புக் கூட்டம் ஜனாதிபதியின் சதி நடவடிக்கையை அம்பலப்படுத்திவிட்டது என்கிறார் அவர்.

"ஜே.வி.பி. ஏற்பாடு செய்த ஹைட் பார்க் பொதுக்கூட்டத்தில் என்னைப் பங்குபற்ற வேண்டாம் என்று ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். அரசின் சமாதான முயற்சியை சுதந்திரக்கட்சி சீர் குலைப்பதாக இருக்கக் கூடாது என்பதால், அக்கூட்டத்தில் பங்குபற்ற வேண்டாம் என்று அவர் கூறினார். இப்படி என்னிடம் கூறிய அவர், அக் கூட்டத்தில் பங்குபற்றி உரையாற்றுமாறு அனுராவை மெல்லக் கேட்டுக்கொண்டார்.

"எனக்கு எதிரான சதி நடவடிக்கைகளை நான் நன்கறிவேன். ரத்னசிறி விக்கிரமநாயக்க எவ்வாறு வெளியில் அனுப்பப்பட்டார் என்ற அனுபவம் எனக்கு உண்டு.

இனப்பிரச்சினையில் தீவிர சிங்களப் போக்கைக் கடைப்பிடிக்கும்படி முன்னாள் பிரதமரான அவர் கேட்கப்பட்டார். அவரை செல்லாக்காசாகவும அரசியலில் ஒழித்துக்கட்டவுமே இவ்வாறு செய்யப்பட்டது - இப்படி மஹிந்த ராஜபக்ஷ கூறினார் என்று அச் செய்தி தெரிவிக்கின்றது. (உ)

## கூட்டுறவுத் திணைக்களத்தின் முன் நாளை முதல் தொடர் மறியற்போர்!

### உதவிக் கணக்காய்வாளர்கள் முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஏப்.29

கூட்டுறவுத் திணைக்கள உதவிக கணக்காய்வாளர்கள் தம்மை நிரந்தரமாக்க வேண்டும் என்று கோரி நாளை முதல் தொடர் மறியற்போராட்டத்தை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

காங்கேசன்துறை வீதியில் தட்டாதெருச் சந்திக்கு சமீபமாகவுள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள அலுவலகம் முன்பாகவே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டம் யாழ்.மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள கணக்காய்வாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவிடயமாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1997 ஆம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து கூட்டுறவுத் திணைக்களத்தில் உதவிக் கணக்காய்வாளர்களாக கடமையாற்றி வந்த நாம் பல்வேறு சந்தர்ப்பத்தில் அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், சம்பந்தப்பட்ட அரசின் உயர் அதிகாரிகளுக்கு எமது நிரந்தர நியமனம் சம்பந்தமான கோரிக்கையை முன்வைத்து போராடி வந்தோம். அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் சில உறுதி மொழிகளை தந்து எமது போராட்டத்தை முடக்கினார்களே தவிர, எமது நியமனம் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் முன்வைக்கவில்லை.

கடந்த வருட இறுதியில் கூட்டுறவுப் பரிசோதகர் ஆளசேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரி இருந்தபோது எமது போராட்டத்தை நாம் தீவிரப்படுத்தி இருந்தோம். அவ்வேளை அன்றைய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் எமது நியமனம் தொடர்பாக தாங்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து சில முன் நடவடிக்கைகளை செய்து காட்டி எமது போராட்டத்தை முடக்கினார்கள். அதற்கு மேற கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் தமது பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த வாரம் கூட்டுறவுப் பரிசோதகர் ஆள் சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகி உள்ளன. ஏற்கனவே இப்பதவிகளுக்கான ஆள்சேர்ப்புக்கு முன்னதாக எமது நிரந்தர நியமனங்களை வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் அக் கோரிக்கை நிவர்த்தி செய்யப்படவில்லை. மேலும் இந்த நியமனங்கள் வழங்கப்படுமாயின் ஆளணி வெற்றிடம் இல்லை எனக் காரணங்கள் காட்டி எமது கோரிக்கைகள் ஏற்கப்படாமல் போய்விடவும் வாய்ப்புகள் உள்ளன. எனவேதான் இத்தருணத்தில் மறியற் போராட்டத்தினை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

எமது இந்த மறியற் போராட்டமானது கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு எதிரானதாகவோ வேறு தனிப்பட்டவர்களுக்கு எதிரானதாகவோ அமையமாட்டது.

எனவே, எமது கோரிக்கையினை வென்றெடுப்பதற்கான இப் போராட்டத்திற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், கூட்டுறவாளர்கள், கூட்டுறவு அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள், கல்விச் சமூகம் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது பரிபூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

(உ-3)

### குடும்பஸ்தர் மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

கொழும்புத்துறை - மணியந்தோட்டப் பகுதியில் விறகு எடுக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலதுகாலை பாதத்துடன் இழந்தார்.

குருநகர், சென்பற்றிக்ஸ் வீதியைச சேர்ந்த சேவியர் யோசப் அருள்தாஸ் (வயது 38) என்ற இருபிள்ளைகளின் தந்தையே மிதிவெடியில் சிக்கியவராவார்.

நேற்றுக்காலை மணியந் தோட்டப் பகுதியில் விறகு எடுத்து வருவதாகத தெரிவித்து வேறு சிலருடன் சென்ற இவர் திரும்பி வரும்போது 11 மணியளவில் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்தார்.

சிகிச்சைக்காக இவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

மணியந் தோட்டப் பகுதியில் இந்த வருடம் இடம்பெற்ற மூன்றாவது மிதிவெடிச் சம்பவம் இதுவாகும்.(உ-6)

### எழுச்சிப் படங்கள் காண்பிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

குடாநாட்டில் உள்ள திரையரங்குகள் (மினிசினிமா) பலவற்றிலும் தற்போது எழுச்சிப் படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகளின் வருகையைத் தொடர்ந்து எழுச்சிப் படப்பிரதிகள் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

'ஆனையிறவுச்சமர்', 'ஓயாத அலைகள் I,II,III', 'முல்லைச்சமர்', 'ஜெயசிக்குறு முறியடிப்புச் சமர்' போன்ற புரட்சிப் படங்களே இவ்வாறு காண்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் படங்கள் காண்பிக்கப்படும் வேளையில் திரையரங்குகள் நிரம்பி வழிவதையும் காணமுடிகின்றது.

இதேவேளை -

வீடியோ படப்பிரதிகள் வாடகைக்கு கொடுக்கும் கடைகளிலும் தற்போது எழுச்சிப்படப்பிரதிகளும் வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன.

(உ-4)

## எதிரணியின் 15எம்.பிக்களை கைது செய்ய அரசு திட்டம்?

### வெளிநாடுகளிடம் பொ.ஐ.மு.முறைப்பாடு

கொழும்பு,ஏப்.29

பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்ய அரசு திட்டமிட்டுகிறது என்று 86 நாடுகளின் சபாநாயகர்களிடம் முறையிட்டிருக்கின்றது அக்கட்சி.

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் பலவற்றிடமும் பொ.ஐ. முன்னணி இந்த முறைப் பாட்டைத் தெரிவித்திருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சி முக்கியஸ்தர்களையும் அரசு கைது செய்து வருவதாகவும் முன்னாள் அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கிறார் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியிருக்கிறது.

அடுத்த சில தினங்களில் மங்கள சமரவீர, டிலான் பெரேரா, ரெஜிரணதுங்க, பவித்திரா வன்னியாராச்சி உட்பட 15 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்ய அரசு திட்டமிட்டிருக்கின்றது என்றும் பொ.ஐ.முன்னணி தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறது.




பிரான்ஸின் அதிபர் தேர்தலில் இரண்டாவது சுற்று வாக்களிப்பில் போட்டியிட தகுதி பெற்ற தீவிர வலதுசாரி வேட்பாளர் ஜீன்மரி லீ பென்னுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று.

# பிலிப்பைன்ஸ் கடலில் அரிசிக் கப்பல் மூழ்கியது

## கப்டன் பலி என அச்சம்

மணிலா,ஏப்.29

பிலிப்பைன்ஸில் அரிசி ஏற்றிக் கொண்டு சென்ற கப்பல் ஒன்று சூறா வளியில சிக்கிக் கடலில் மூழ்கியது. கப்பலில் இருந்த 11 பணியாளர்கள் மற்றும் இரு அரச அதிகாரிகள் ஆகியோர் கடலோரக் காவல்படையினரால் மீட்கப்பட்டனர். ஆயினும் கப்பலின் தலைமை மாலுமி ருபினோ பரல் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

துறைமுக நகரான செபுவில் இருந்து கமோடஸ் தீவுக்கு 8ஆயிரத்து 500 மூடை அரிசியை ஏற்றிச் சென்ற 'கோல்டன் டிராகன்' என்ற கப்பலே மூழ்கியது. கரையில் இருந்து சுமார் 600 கிலோ மீற்றர் தொலைவில் சென்றுகொண்டிருந்தபோது பலத்த மழை மற்றும் சூறாவளியில் சிக்கி இந்தக் கப்பல் கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் இதே கடற் பகுதியில் அமெரிக்கக் ஹெலி ஒன்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்ததில் பத்துப் பேர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பொலிஸ் அதிகாரியாக நடித்த காமுகனுக்கு 16 ஆண்டுகள் சிறை!

## சிங்கப்பூர் நீதிமன்றம் விதித்தது

சிங்கப்பூர் சிற்றி,ஏப்.29

பொலிஸ் அதிகாரிபோல் நடித்து சிறுமிகளையும் யுவதிகளையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய காம வெறியனுக்கு சிங்கப்பூர் நீதிமன்றம் 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

சிங்கப்பூர் நகர நிர்வாக சபையின சுகாதார பிரிவில் அதிகாரியாகப் பணியாற்றிய டேவிட் டண்டியான் கிவி (வயது 40) என்பவனுக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

1998ஆம் ஆண்டில் இருந்து சமீபத்தில் டேவிட்டன் கைது செய்யப்படும்வரையிலான காலப்பகுதியில் 31 பெண்களை வல்லுறவுக்குட்படுத்தியதாக அவன் மீது பொலீஸார் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தனர். பாதிக்கப்பட்டவர்கள் 8 முதல் 18 வயதுக்குட்பட்டவர்களாவர்.

போக்குவரத்து பொலீஸார் அணியும் தொப்பியை அணிந்துகொண்டு தெருவில் நிற்கும் டேவிட்டன், தன்னை பொலீஸ் அதிகாரி என்று கூறி மிரட்டியே சிறுமிகளையும், யுவதிகளையும் கூட்டிச்சென்று வல்லுறவுக்குட்படுத்தியதாக விசாரணையில் தெரிய வந்தது. (ஒ)

## இந்தோனேஷியாவில் மத வன்முறை

# கிறிஸ்தவ கிராமம் மீது முஸ்லிம் கும்பல் தாக்குதல்!

## 12பேர் பலி; தேவாலயங்கள் தீக்கிரை!!

ஜகார்த்தா,ஏப்.29

இந்தோனேஷியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள மொலுக்கன் பகுதியில் உள்ள தீவில் நேற்று கிறிஸ்தவ கிராமம் ஒன்றை முஸ்லிம் கும்பல் ஒன்று தாக்கியதில் 12பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பிரதேச தலைநகரான அம்பொன் நகரில பெரும் வன்முறை மூண்டது. நகரின் பிரதான தேவாலயங்கள் கொளுத்தப்பட்டன. கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய சிறுவர்கள் தங்கியிருந்த பராமரிப்பு நிலையம் ஒன்றில் குண்டுவெடிப்புச் சம்பவமும் இடம்பெற்றது.

நேற்றுக் காலை சோயா என்ற கிராமத்துக்குள் புகுந்த முஸ்லிம்கள் அடங்கிய கும்பல் ஒன்று நாட்டு வெடிகுண்டுகளைத் வீசித் தாக்கியதாகவும் -

சுமார் 30 வீடுகளுக்கும் தேவாலயம் ஒன்றுக்கும் அந்தக் கும்பல் தீ வைத்ததாகவும் -

உள்ளூர்ச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்களில் ஆறுபேர் வெட்டிக்கொல்லப்பட்டதுடன் வேறு ஆறுபேர் தீயில் சிக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த இருவரும் மோதலில் கொல்லப்பட்டதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வியாழக்கிழமை கிறிஸ்தவ பிரிவினைவாத அமைப்பான தென்மொலுக்கா குடியரசின் உறுப்பினர்கள் அம்பொனில் தமது அமைப்பின் கொடிகளை ஏற்றியதாகவும் -

இதற்கு பதில் நடவடிக்கையாக லஸ்கர் ஜிகாத் என்ற தீவிரவாத அமைப்பு கிறிஸ்தவர்களுக்கு எதிரான புனிதப் போருக்கு அழைப்பு விடுத்ததாகவும் -

இதனையடுத்தே சோயா கிராமம் மீதான தாக்குதல் இடம்பெற்றதாகவும் சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த பெப்ரவரி மாதம் மொலுக்கன் தீவில் கிறிஸ்தவ, முஸ்லிம் தலைவர்கள் இடையே உடன்பாடு ஒன்று எட்டப்பட்ட பின்னர் அங்கு வன்முறைகள் வெடித்திருப்பது இதுவே முதல்முறை ஆகும்.



மொலுக்கா தீவின் தலைநகர் அம்பொனில் மத வன்முறை மூண்ட சமயம் தமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக ஓடித்தப்பும் பொதுமக்களைப் படத்தில் காணலாம்.

இந்தோனேஷியாவின் 2கோடி பத்து லட்சம் சனத்தொகையில் 85 வீதத்தினர் முஸ்லிம்கள் என்றபோதிலும் மொலுக்கா தீவில் பெரும்பான்மையானவர்கள் கிறிஸ்தவர்களாவர். இந்த நிலையில் மொலுக்கா தீவில் பிரிவினை கோரி கிறிஸ்தவர்கள் நடத்தும் கிளர்ச்சியில் இதுவரை 6ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

# பாகிஸ்தானில் தலிபான்களை அமெரிக்கப் படை தேடுகிறது

லண்டன்,ஏப்.29

பாகிஸ்தானில் மறைந்துள்ளதாக நம்பப்படும் தலிபான் மற்றும் அல்கெய்டாவினரை தேடும் பணியில் நேற்றுமுன்தினம் முதல் அமெரிக்கப் படையினரும் பாகிஸ்தானிய இராணுவத்தினருடன் இணைந்து ஈடுபடுகின்றனர்.

ஆப்கானிய எல்லை அருகே உள்ள பாகிஸ்தானிய பழங்குடிப் பிரதேசத்தில் இந்தத் தேடுதல் வேட்டை இடம்பெற்றுவருகிறது.

இதேசமயம், இந்தக் கூட்டுப்படை நடவடிக்கையை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

தலிபான்களின் ஆட்சியில் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராக இருந்த மௌலவி ஜலாலுதீன் ரக்குவானியால் டார்பா கீல் கிராமத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசலில் சுமார் 100 பாகிஸ்தானிய இராணுவத்தினருடன் பத்து வெளிநாட்டுப் படைவீரர்கள் இணைந்து தேடுதல் நடத்தியதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். தேடுதல் நடத்தப்பட்ட பள்ளிவாசல் மற்றும் மதபோதனை பாடசாலை ஆகியவற்றுக்கு நேரில் சென்று பார்வையிட்ட உள்ளூர் செய்தியாளரான ரஹ்மதுல்லா கூறுகையில்-

தேடுதலின்போது கதவுகளும் ஜன்னல்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தானியப் பழங்குடிப் பிரதேசத்தில் பாகிஸ்தானுடன் இணைந்து அமெரிக்கா ஆப்கான் போராளிகளைத் தேடும் பணியில் ஈடுபடுவது இதுவே முதற்றடவை ஆகும்.



பாகிஸ்தானில் தலிபான்கள் மற்றும் அல்கெய்டாவினரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தானிய சிறப்பு அதிரடிப்படையினர்.

இதேசமயம், பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகள் இருப்பதை பாகிஸ்தானிய அதிகாரிகள் தொடர்ந்து மறுத்து வருகின்றனர். உள்ளூர் செய்தியாளர்கள் பாகிஸ்தானிய அதிகாரிகளிடம் இது தொடர்பாகக் கேள்விகளை எழுப்பியபோதும் அவர்கள் எவ்வித தகவல்களையும் வெளியிட மறுத்துவிட்டனர்.

இதுவரை அமெரிக்க, பாகிஸ்தானிய படைகளின் தேடுதலில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. (ஒ)

# பழங்குடியினர் தாக்கியதில் ஆப்கானில் 25 பேர் பலி!

காபூல்,ஏப்.29

கிழக்கு ஆப்கானிஸ்தானில் அதிருப்தி பழங்குடித் தலைவரின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 25பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த பெப்ரவரி மாதம் பக்டியா பிரதேசத்தின் ஆளுநர் பதவியிலிருந்து இடைக்கால அரசால் விலக்கப்பட்ட பழங்குடித் தலைவர் பட்ஷாகான் ஷெட்ரன் என்பவரின் ஆதரவுப் படையே பிரதேசத் தலைநகர் கார்டெஜ் நகரை நோக்கி கடும் ரொக்கெட் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

கார்டெஜ் நகரில் பட்ஷாகானின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பதிலடியாகவே ரொக்கெட் தாக்குதல் நடந்துள்ளதாகவும்-

இதில் இறந்தவர் அனைவரும் அப்பாவிப் பொதுமக்கள் என்றும் -

பக்டியா மாகாண ஆளுநர் தாஜ் முஹமட் வோர்டக் தெரிவித்தார்.

ஆப்கானில் சர்வதேச அமைதிப் படையை விரிவுபடுத்தாது, உள்ளூர் படைகளுக்குப் பயிற்சியும், நிதி உதவியும் வழங்கி பலம்வாய்ந்த இராணுவமாக உருவாக்குவது குறித்து அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலர் டொனாட் ரம்ஸ்பீல்ட் ஆப்கான் இடைக்கால அரசின் தலைவர் ஹமீட் ஹர்சேயுடன் பேச்சு நடத்தியதையடுத்தே பழங்குடிக் குழுக்கள் கார்டெஜில் மோதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானில் பெரும்பாலான பகுதிகள் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களை வைத்துள்ள பழங்குடித் தலைவர்கள் மற்றும் அவர்களது தனிப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், ரம்ஸ்பீல்டின் யோசனைப்படி, தமக்கு நிதியுதவியும், பயிற்சியும் தரப்படவேண்டும்

உலக அரங்கில்

என்று அந்தப் பழங்குடித் தலைவர்கள் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய பிரச்சினையை எதிர்கொள்வதைத் தவிர்க்கவே ஹர்சே சர்வதேச அமைதிப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும்படி அமெரிக்காவை முன்னர் கோரியிருந்தார்.

அமெரிக்காவின் தற்போதைய யோசனையின்படி, ஆப்கான் தேசிய இராணுவம் விரிவுபடுத்தப்பட்டாலும், பல்வேறு பழங்குடியினக் குழுவினரை கொண்டிருக்கக்கூடிய அந்தப் படைக்குள் பூசல்கள் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்றும் -

அத்தகைய ஓர் இராணுவத்தைக் கொண்டு ஆப்கானை பலம்வாய்ந்த நாடாக ஒருபோதும் மாற்றமுடியாது என்றும் -

ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டனர். (ஒ)

# ரஷ்ய அரசியல் தலைவர் ஹெலி விபத்தில் உயிரிழப்பு!

மொஸ்கோ,ஏப்.29

ரஷ்யாவில் பிரபல அரசியல்வாதி ஒருவர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிழந்தார். இவருடன் ஹெலியில் பயணித்த வேறு 5பேரும் இந்தச் சம்பவத்தில் இறந்தனர்.

ரஷ்ய அதிபர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டவரும் கிரஸ் நோயார்ஸ்க் பிரதேசத்தின் முன்னாள் கவர்னருமான அலெக்ஸாண்டர் லெபெட் (வயது52) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்த அரசியல்வாதியாவார்.



லெபெட்

வானிலை ஆய்வு மையம் ஒன்றை திறந்து வைப்பதற்காக யெர்மகோவ்ஸ் யோயே மாவட்டத்துக்கு லெபெட்டும் உள்ளூர் அதிகாரிகளும் ஹெலியில் பயணித்துக்கொண்டிருந்ததாகவும் -

அபாகன் என்ற பகுதியின் மீது பறந்துகொண்டிருந்த சமயம் அதிஉயர்வலு கொண்ட மின்சார விநியோகக் கோபுரத்துடன் ஹெலி மோதி விபத்துக்குள்ளானதாகவும் -

மோசமான வானிலை காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகவும்- கூறப்படுகிறது.

1996ஆம் ஆண்டு இடம்பெற்ற ரஷ்ய அதிபர் பதவிக்கான தேர்தலில் போட்டியிட்ட லெபெட், அவருடன் போட்டியிட்ட பொரிஸ் யெல்ஸினை தோற்கடித்து அதிபராவார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் லெபெட் அதில் தோற்றுப்போனமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# காபூல் விமான நிலையத்தில் 'ரொக்கட்' குண்டுவெடிப்பு!

காபூல்,ஏப்.29

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் மூன்று ரொக்கட் குண்டுகள் விழுந்து வெடித்தன. அமெரிக்கப் பாதுகாப்புத்துறைச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் காபூல் விமான நிலையத்தில் வந்திறங்குவதற்கு சிறிதுநேரம் முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் -

குண்டுவீச்சை நடத்தியது யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் -

பிரிட்டிஷ் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் சிரேன் டெவி தெரிவித்தார்.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ஆப்கானுக்கு விஜயம் மேற்கொள்ளும் சமயத்தில் நடந்த இந்தச் சம்பவத்தால் அவருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதில் ஆப்கானில் உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் படையினர் கடும் நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# முக்கிய அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள
அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களாக
இருந்துகொண்டு படிப்பு லீவுக்கான முன்அனுமதி பெறாது
பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாக
பாடநெறிகளைப் பின்பற்றி பயில்வோர்களுக்கான அறிவித்தல்

மேற்குறித்த விடயமாக 04.08.1999ஆம் திகதிய [illegible] 21/99 இலக்க கல்வி உயர்கல்வி அமைச்சு செயலாளரி [illegible] பட்ட 1999/28 இலக்க சுற்றுநிருபம் கீழே தரப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபத்திலுள்ள கட்டளைக்கு மாறா பட்ப லீவுக்கான முன்அனுமதி பெறாமல் உள்வாரி மாணவ[illegible] [illegible]ழகங்களில் பயின்று கொண்டிருக்கும் ஆசிரியர்கள் 02.05.2002ஆம் திகதி முதல் பதவியிலிருந்து நீங்கிக்கொண்டதாகக் கருதப்படுவார்கள்.

இந்த அறிவித்தலுக்கு இணங்க சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி பணிக்கப்படுகின்றார்கள்.

இந்தச் சட்டமுறையற்ற செயலை உடனடியாகத் தடைசெய்யும் வகையில் பதவி வெறிதாக்கல் கடிதங்களைத் தாமதமின்றி அனுப்புமாறு வலயப் பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

க.சண்முகலிங்கம்
செயலாளர்
கல்விப் பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
*திருகோணமலை.*

சுற்று நிருப இலக்கம்:- 1999/28
*எல்லா மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்*
*எல்லா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளர்களுக்கும்*
*எல்லா மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்*
*எல்லா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,*

அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும்
ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில்
உள்வாரி மாணவர்களாகப் பாடநெறிகளைப் பின்பற்றல்

அரசாங்கப் பாடசாலைகளில் சில ஆசிரியர்கள் முறையாகக் கல்வி விடுதலையை அங்கீகரிப்பித்துக்கொள்ளாமல் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்காக இந்த அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

முழுநேர ஆசிரிய சேவையில் ஈடுபடவேண்டிய இவர்கள் இவ்வாறு பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பாடநெறிகளைப் பின்பற்றுவதன்மூலம் தம்மிடம் கற்கும் மாணவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்வதற்குத் தடை ஏற்படுகின்றது. இது முற்றாகச் சட்டத்துக்கும் முறைமைக்கும் விரோதமான செயலாகும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். *அங்கீகாரமின்றிப் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பதிவுசெய்யப்பட்டுப் பாடநெறிகளைப் பின்பற்றும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதோடு இவ்வாறு செயற்படும் ஆசிரியர்கள் தமது பதவியை இழப்பர்* என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். எவ்வாறாயினும் அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் தமது அரச கருமக் கடமைகளுக்குத் தடை ஏற்படாதவாறு வெளிவாரி மாணவர்களாகப் பல்கலைக்கழகங்களில் பாடநெறிகளைப் பின்பற்றுதல் தொடர்பாக அமைச்சுக்கு ஆட்சேபனை இல்லை.

இச்சுற்றுநிருபத்தில் உள்ள அறிவுறுத்தல்களை உரியவாறு செயற்படுத்தல் தொடர்பாக உரிய எல்லா அலுவலர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஏ.அன்றூ த சில்வா
செயலாளர்
கல்வி உயர்கல்வி அமைச்சு.

(சி-21949)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 16 - 05 - 1950

விண்ணுலகில் 21 - 04 - 2000

## திருமதி சண்முகமலர் தர்மராஜா

(புனிதம், இணுவில் மேற்கு)
திதி: 29.04.2002

எங்களைப் பெற்று அன்பாய்
தரணியிலே பண்பாய் வளர்த்த அம்மாவே!
எங்களை எல்லாம் ஊர் போற்ற
எழுத்தறிவித்த அம்மாவே!
எங்களை எல்லாம் தவிக்கவிட்டு
எம்மிடம் ஒன்றும் வாங்காமல்
ஏன் தெய்வம் ஆனாய் அம்மாவே?

வே.தர்மராஜா
*கற்பகப் பிள்ளையார் கோயிலடி,*
*இணுவில் மேற்கு, சுன்னாகம்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்.
(3246)

## பாடநூல்களின் இறுதித் தொகுதி வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இந்த ஆண்டுக்குரிய இலவச பாடநூல்களின் இறுதித் தொகுதி கடந்த வியாழக்கிழமை கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது.

இந்த நூல்கள் யாவும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இவை தரம்பிரிக்கப்பட்டு ஐந்து கல்வி வலயங்களுக்கும் உடனடியாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆண்டு 4க்கான புதிய பாடத்திட்ட நூல்களும் இவற்றுள் எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-10-8)

## பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம் மீண்டும் பளையில்!

தென்மராட்சி,ஏப்.29

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதால் இப்பகுதியில் கிளைக் கடைகளை விரைவில் ஆரம்பிக்க பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முதல்கட்டமாக பளை நகர், புலோப்பளை, மாசார் ஆகிய பகுதிகளில் கிளைக்கடைகளை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கண்டிவீதியில் செல்லும் பயணிகள் நலன்கருதி புதுக்காட்டுச் சந்தியில் உணவகம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். (ஓ-117)

## எழுதுமட்டுவாழ் கணேசா வித்தி. மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.29

எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாசாலை மூலம் ஜுன், ஒகஸ்ட் மாதங்களில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தமக்குரிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (எ)

## கடற்படைத் தளங்களுக்கு தளபதி விஜயம்

கொழும்பு,ஏப்.29

இலங்கையின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நாட்டில் உள்ள அனைத்து கடற்படைத் தளங்களுக்குமான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக அவர் நேற்று முன்தினம் திருகோணமலை கடற்படை தலைமையகத்துக்கு விஜயம் செய்து அதன பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (ம-6-9)

## வல்லை சிவன் ஆலயத்திற்கு அடிக்கல்!

யாழ்ப்பாணம்,ஏப்.29

வல்வெட்டித்துறை, இலந்தைக்காடு வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள சிவன் ஆலயத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

*வேலணை வைத்திய கலாநிதி*
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 2459.
(2852)


# கல்விச்சாலைக் காட்சிகள்



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டி நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் முதன்மை விருந்தினரான வலிகாமம் கல்விவலய முன்னாள் நிர்வாக உத்தியோகத்தரும், தற்போது கோப்பாய் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி வருபவருமான ச.வீரசிங்கம், திருமதி வீரசிங்கம் மற்றும் அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம், உபஅதிபர் திருமதி ப.பத்மநாதன், ஆசிரியர் வை.பாலேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)



பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி விளையாட்டு விழாவை ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் அதிபர் வே.சிவசிதம்பரம், உபஅதிபர் சோ.நடராஜா, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் கே.சிவசங்கர் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-72)



யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, திருமதி சா.விக்னராஜா மற்றும் சிறப்புவிருந்தினர்களான பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஆர்.இருதயநாதன், அருட்தந்தை ஏ.சி.கிறிஸ்தோபர் ஆகியோரை வித்தியாலய அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ், ஆசிரியர்கள் மைதானத்துக்கு அழைத்துவருவதைப் படத்தில் காணலாம். (எ)



சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் சங்கானை மகாதேவப்பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெற்றன.

இந்தப் போட்டி நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம் பாடசாலைக் கொடியேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் திருமதி ச.ஸ்ரீபிரபாகரன், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வ.குகவேள் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-29)

உதயன்

## ஈழத்துக்கு மாற்றீடான தீர்வு

"நாட்டைப் பிரிக்காமல் அதிகாரப் பரவலாக்கல் மூலம் ஈழத்துக்கு மாற்றீடான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காகவே தாய்லாந்தில் புலிகளுடன் ஒரே மேசையில் அமர்ந்து பேசப்போகின்றோம்."

- இவ்வாறு மல்வத்தை பீடத்தின் தலைவரான மகாநாயக்கர் ரம்புக்வெவ விபஸி தேரரிடம் தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இனப்பிரச்சினை விவகாரத்துக்கு நிலைத்து, நீடித்து நிற்கக்கூடிய தீர்வு ஒன்று காணப்படவேண்டும்.

ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தீர்வு ஒன்றே நீடித்து நிலைத்து நிற்கும் என்பது யாவரும் அறிந்த விடயம்.

ஈழத்தமிழர்கள் தங்கள் அபிலாஷை என்னவென்பதை 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தினார்கள்.

தனித் தமிழீழம் ஒன்றை அமைப்பதே ஈழத்தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்வதாக அமையும் என்ற தங்கள் முடிவை அத்தேர்தல் மூலம் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

ஈழத்தமிழர்களின் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறுவதை அனுமதிக்கமுடியாது என்று மறுத்தது சிங்களப் பேரினவாதம்.

விளைவு.........?

இனச்சிக்கல் மோசமானது. இறுதியில் பெரும் போராக அது வெடித்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். கணக்கெடுக்கமுடியாத அளவுக்கு சொத்துக்கள், உடைமைகள் நாசமாகின. மக்கள் இடம்பெயர்ந்து சிதறுண்டு நாதியற்றவர்களானார்கள். நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்தது. மொத்தத்தில் முழு நாடும் - அனைத்து இனங்களும் - பேரழிவைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

இந்தப் பேரழிவுக்கு மத்தியில்தான் இனச்சிக்கலுக்கு நிலைத்து, நீடித்து நிற்கும் - ஆக்கபூர்வமான - தீர்வொன்றுக்கான புதிய தேடல் முயற்சிகள் ஆரம்பமாகின.

அதன் பயனாக அமைதிப் பேச்சுக்களுக்கும் சமாதான வாய்ப்புகளுக்கும் இடம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் ஈழத்துக்கு மாற்றீடான அரசியல் தீர்வு குறித்து தாய்லாந்தில் பேச்சு நடக்கப்போகின்றது என்ற தகவலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரஸ்தாபித்திருக்கின்றார்.

தாய்லாந்தில் பேச்சு ஆரம்பமாவதற்கு முன் இன்னும் சில நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியுள்ளன.

அதில் முக்கியமானது விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் விவகாரம்.

இந்த இடைஞ்சல்களை எல்லாம் தாண்டி தாய்லாந்தில் பேச்சு மேசைக்கு புலிகள் பிரதிநிதிகளும் அரசுப் பிரதிநிதிகளும் வந்து அமர்ந்தாலும்கூட, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சுக்களை அவர் உடனடியாக ஆரம்பிக்கப்போவதில்லை.

முதலில், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் குறித்தே இருதரப்பும் பேசி முடிக்கவேண்டியிருக்கும்.

அதன் பின்பே - ஆறுதலாகவே - இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு பற்றிய விடயம் குறித்து இருசாராரும் பேச ஆரம்பிப்பர்.

அப்போதுதான் ஈழத்துக்கு மாற்றீடான தீர்வு விவகாரம் பேச்சு மேசையில் அவிழ்க்கப்படும்.

அது எத்தகையதாக இருக்கலாம் என்பது குறித்து கிளிநொச்சியில் சர்வதேசப் பத்திரிகையாளர்களுக்கு தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தலைவர் பிரபாகரன் கோடி காட்டியிருந்தது இங்கு கவனிக்கத்தக்கது.

"ஒரு நாட்டுக்குள் சுயநிர்ணய உரிமை" என்ற வாசகம் அப்போது பரிமாறப்பட்டது. அந்த வாசகத்தின் அர்த்தம் - விளக்கம் - என்னவென்பது குறித்து பல்வேறு தரப்பிலும், பல்வேறு விதமான வியாக்கியானங்கள் கூறப்பட்டு வருகின்றன.

எது எப்படியென்றாலும் நிரந்தரமான - நீடித்து நிற்கக்கூடிய - தமிழர்கள் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க - ஓர் அரசியல் தீர்வு கிட்டுவதாயின் இரண்டு விடயங்களைத் தாண்டி வருவதற்கு சிங்களப் பேரினவாதம் இணங்கியாகவேண்டும்.

ஒன்று - ஒற்றையாட்சி முறையில் இருந்து விடுபடச் சம்மதிக்கவேண்டும்.

மற்றது - சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தமிழர் தாயக அமைப்பு, தன் அபிவிருத்திக்குரிய நிதியை வெளிநாடுகள் மற்றும் ஐ.நா.போன்ற அமைப்புகளிடமிருந்து நேரடியாகப் பெறுவதற்கான உரிமையை அங்கீகரிக்கவேண்டும்.

இதற்கு சிங்களத் தரப்புத் தயாரா? அப்படியானால், ஈழத்துக்கு மாற்றீடான அரசியல் தீர்வும் தயார் என்று கருதலாம்.

# அமைதிச் சூழல் நிலவும் நிலையிலும் வடக்கு-கிழக்கில் கல்வித்தரம் வீழ்ச்சி

கொழும்பு,ஏப்.29

புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து அமைதிச் சூழல் நிலவும் நிலையில் வடக்கு - கிழக்கில் கல்வியின் தரம் அதலபாதாளமளவுக்கு வீழ்ச்சியடைந்துவிட்டதாக கல்விச் சமூகம் கவலை வெளியிட்டுள்ளது.

கல்வித்திணைக்கள வட்டாரங்களின் தகவலின்படி பாடசாலைக்கு வருகைதரும் மாணவர்களின் தொகை அபரிதமாக வீழ்ச்சி கண்டிருக்கிறது. 1990களில் வடக்கு - கிழக்கில் பாடசாலைக்குச் சமுகமளித்தோர் தொகை 2லட்சத்து 19 ஆயிரம் ஆகும்.

2000ஆம் ஆண்டு இது ஒரு லட்சத்து 30ஆயிரமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயிரத்து 989 பாடசாலைகளில் 172 பாடசாலைகள் பல்வேறு காரணங்களால் மூடப்பட்டுவிட்டன. யாழ்ப்பாணத்தில் 105 பாடசாலைகள் அகதிகள் மற்றும் இராணுவ முகாம்களாக மாறிவிட்டதனால், அவற்றில் பயின்றோர் தற்போது தற்காலிக இடங்களில் வசதியீனங்களின் மத்தியில் கல்வி கற்ற நேரிட்டுள்ளது.

சமாதான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதால் பாடசாலைகளுக்கு மாணவர் வருகை தந்தபோதிலும் இடம்பெயர்ந்த காலத்தில் இழந்துவிட்ட கல்வியை மீளெடுக்க அவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

மாணவர்கள் தமது பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் என அனைவரையுமே போரால் இழந்திருக்கக்கூடும்.

எவ்வித வசதியுமின்றி, பாதுகாவலர் எவருமே இல்லாத ஒரு மாணவனுக்கு பாடசாலை ஞாபகம் அற்றுவிடும் நிலையே காணப்படுகின்றது.

இதற்காக கல்வித்திணைக்களம் முறைசாராக் கல்வி முறையை நாடுமுழுவதும் வலியுறுத்தவிருக்கிறது. இதன் மூலம் வயது வேறுபாடு நோக்காது தரத்திற்கேற்ற கல்வியை வழங்கமுடியும். வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மட்டுமன்றி நாட்டின் மற்றைய பகுதிகளிலும் கல்வியின் தேவை பற்றி விழிப்புணர்வு ஏற்படும் வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவிருக்கின்றன. (ஒ)

# இடைக்கால நிர்வாக முறையில் பெண்களுக்கு கணிசமான இடம்

## ஐ.நா.அதிகாரி வலியுறுத்து

கொழும்பு,ஏப்,29

வடக்கு - கிழக்குக்கான உத்தேச இடைக்கால நிர்வாகத்தில் பெணகளுக்கும் கணிசமான பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலம் அவாகளது உரிமைகள் பேணப்படவேணடும்.

- இவ்வாறு கோரியுள்ளார் ஐ.நாவின் பெண்களுக்கான விசேட ஒருங்கிணைப்பாளர் திருமதி ராதிகா குமாரசாமி.

ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:-

- 'யுத்தத்தினால் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். உடல், உளரீதியாக மட்டுமன்றி, பாலியல் வன்முறை..சித்திரவதை மற்றும் பாலியல் அடிமைத்தனம் என்பவற்றால் பெண்கள் அளவுக்கு மீறி பாதிப்படைந்துள்ளனர்.

புள்ளி விவரங்களின்படி உள்ளூரில் இடம்பெயர்ந்த அகதிகளில் 80வீதம் பெண்களும், சிறுவர்களுமே உள்ளனர். பல வீடுகளில் பெண்களே பிரதம குடியிருப்பாளர் ஆகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நோர்வே நாட்டினால் முன்னெடுக்கப்படும் சமாதான வழிகாட்டலில் பங்கேற்பதை முன்னிட்டு நான் அதிகம் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால், இப்படியான நிகழ்வுகளில் பங்கேற்கும் பெண்கள் விகிதாசாரம் மிகமிகக் குறைவாக இருப்பதனால் வேதனையுமடைகின்றேன்.

எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிமுதல் 5ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள ஐ.நா. மாநாட்டில் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் நிகழ்வுகள் அமைக்கப்பட்டு சாந்தி, சமாதானம், சாத்வீகம், மேலோங்கவும், பெண்களின் இணைச் செயற்பாடுகள் வலிமைப் படவும் வழிவகைகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவினைப் போராட்டங்கள் மலிந்து காணப்படும் றுவாண்டா, சோமாலியா, சைபிரஸ், பொஸ்னியா, ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், மத்திய கிழக்கு, கிழக்குத் திமோர் போன்ற நாடுகளிலிருந்து 50 இற்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகள் இதில் பங்குகொள்வர்.

மேலும் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், பொலனறுவவின் எல்லைக் கிராமங்கள் மற்றும் விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து 60இற்கும் மேற்பட்ட பெண்கள் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ)

# யாழ்-வவுனியா சேவையில் ஈடுபட தனியார் லொறிகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ் - கண்டி வீதி ஊடாக யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் நேரடியாக பொருள்களை ஏற்றியிறக்கும் சேவையில் ஈடுபடுபடுவதற்கு தனியார் லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

லொறி உரிமையாளர்கள் தமது லொறிகளுக்கு இந்த வருடத்துக்கான வரி மற்றும் காப்புறுதி என்பவற்றைச் செலுத்தி அந்த ஆவணங்களை முகமாலையிலுள்ள சோதனைச் சாவடியில் கையளித்துவிட்டு அங்கு வழங்கப்படும் 'பாஸ்' ஒன்றைப் பெற்றுக்கொண்டு வவுனியாவரை செல்ல முடியும்.

காப்புறுதி மற்றும் உரிய பதிவுகளை மேற்கொள்ளாத லொறிகள் எவையும் இந்தச் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனவும் கூறப்பட்டது. (க-4)

எதிர்வரும் 10ஆம் திகதி முதல்

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வார்ட்டுகளும் செயற்படும்

தென்மராட்சி,ஏப்.29

சாவகச்சேரி ஆஸ்பத்திரி இயங்கத் தொடங்கியதையடுத்து எதிர்வரும் 10ஆம் திகதி முதல் அங்கு வார்ட்டுகளும் செயற்படவுள்ளன.

முதற்கட்டமாக அண்மையில் வடக்கு புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகார சபையினால் (றான்) ஆஸ்பத்திரியில் திருத்தம் செய்யப்பட்ட கட்டடங்களில் இந்த வார்ட்டுகள் இயங்கவுள்ளதாகவும், பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ள பிரசவ விடுதி ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மறுசீரமைத்து வழங்கிய பின்னர் இயங்குமெனவும், தற்போது மந்திகை ஆஸ்பத்திரியில் சேவையில் ஈடுபட்டுள்ள அம்புலன்ஸ் விரைவில் வந்து சேரும் எனவும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செ.யமுனானந்தா தெரிவித்தார்.

இதேவேளை ஏனைய ஆஸ்பத் திரிகளில் கடமையாற்றும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி உத்தியோகத்தர் கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரை மீண்டும் தமது கடமைகளைப் பொறுப்பேற்குமாறு சுகாதார திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.(க-117)

## சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா

அச்சுவேலி,ஏப்,29

அச்சுவேலி தெற்கு நவவோதய சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறும்.

திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வலி கிழக்குப் பிரதேச செயலர் க.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கமும் கலந்துகொள்வர். (க-11)

**நாளை**

சித்திரை 17
செவ்வாய்க்கிழமை
(30.04.2002)
திதி : சதுர்த்தி
பின்னிரவு 3.38 வரை.
நட்சத்திரம் : கேட்டை
முன்னிரவு 7.30 வரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 10.28 - 11.58
ராகுகாலம்: 2.58 - 4.28
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

பெண்களின் கண்ணீர் எப்போதும் பெறுமதியைவிட அதிக விலையைப் பெறுகிறது.

# கண்டெடுக்கப்பட்ட அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.நகரப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றை உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்.பொலீஸ் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டைகள் மற்றும் விசேட அடையாள அட்டைகளுக்கு உரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**விசேட அடையாள அட்டை**

☆ சிங்கராசா பெனடிக்ற் (09010 2615), 3ஆம் குறுக்குத் தெரு, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

☆ முத்துக்குமாரு நடராஜா (091 3010369) பழைய கண்டி, காரைநகர்.

☆ மாணிக்கம் சேகர் (091308419) கரம்பொன் மேற்கு.

☆ சின்னையா நாகரத்தினம் (0902027251) ஆடியபாதம் வீதி, நல்லூர்.

☆ விசுவநாதர் தணிகாசலம் (09 63021518) சிவன்கோயிலடி, புத்தூர் மேற்கு.

☆ சிற்றம்பலம் நல்லம்மா (09080 7228) புலோலி வடக்கு, சந்தா தோட்டம்.

☆ சின்னத்தம்பி சுதாகரன் (0901 012473) ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

☆ சின்ராசா சதீஸ்வரன் (090 2017244) முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை.

☆ செபமாலை கனிசியஸ் (091 303125) மெலிஞ்சிமுனை மேற்கு, ஊர்காவற்றுறை.

☆ கந்தசாமி சுவர்ணலதா (090 9022905).

**தேசிய அடையாள அட்டை**

☆ சீவரத்தினம் மணிபல்லவன் (772763760V) ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி.

☆ வைத்தி கந்தையா ஜெகநாதன் (680062293V) நீலன் காடு. காரை நகர்.

☆ சிற்றம்பலம் நல்லம்மா (335 412842V) புலோலி வடக்கு, சந்தா தோட்டம்.

☆ நவரத்தினம் ஆறுமுகசாமி (552952251V) சங்கானை வடக்கு, பிரான்பற்று.

☆ தர்மலிங்கம் ரவீந்திரன் (6612 91958V) சென்செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு.

☆ நடராசா திருவேலழகன் (773 173621V) வதிரி, கரவெட்டி.

☆ பொன்னையா கசிதா (78801 4538V) 8ஆம் யுனிற், தர்மபுரம்.

☆ சிவஞானம் தனலட்சுமி (7264 70570V) வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

☆ சண்முகலிங்கம் மயூரன் (811 013129V) ஏழாலை வடக்கு.

☆ குலசேகரம்பிள்ளை கருணாநிதி (712330805V) ஊர்காவற்றுறை.

☆ ஒலிவர் விக்கிரமசிங்க பிரபாத் (702874483V) ஏ.வி.றோட், ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

☆ சரவணமுத்து கனகசபை (071980138V) மல்லாகம் வடக்கு. (க-4)



யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் அவர்கள் கரலாக் கட்டை ஆசிரியருக்கு கேடயம் வழங்கி கௌரவிக்கிறார். யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி சுபசிங்கமும் அருகில் காணப்படுகிறார். காலம்:12.01.2002 இடம்:மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்.



58 வயதில் பொ.மகாதேவா

# ஆண்டு 60 இல் மணிவி

பருத்தித்துறை

தே

உயர்திரு. 

## வாழ்த்துவோர்:

திரு.இ.இராசநாதன் (ஐக்கிய விளையாட்டுக் கழகம்)
திரு.மா.இரத்தினசோதி (ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்)
திரு.க.சுரேந்திரன் (துள்ளுமீன் விளையாட்டுக் கழகம்)
திரு.பா.சித்திரவடிவேலாயுதம்
(மலாயன் சான்டோ உடற்பயிற்சிக் கழகம்)
திரு.பா.அகிலன்
(காண்டீபன் விளையாட்டுக் கழகம் - இன்பருட்டி)
திரு.வே.சச்சிதானந்தம் இந்துஜன்
(உடற்பயிற்சி நிலையம், தொண்டமனாறு)
திரு.ஜோன் ஒலிவர் கிறிஸ்ரியன்
(சென்.தோமாஸ் விளையாட்டுக் கழகம்)
திரு.R.கணேசமூர்த்தி
(யாழ்.மாவட்ட கராத்தே சங்கத் தலைவர்)
திரு.A.மோகன் மாஸ்டர், திரு.B.றேமன் மாஸ்டர்
(A.O.M.A. சோட்டோக்கான் கராத்தே, யாழ்ப்பாணம்)
திரு.T.பிரபாகரன்
(A.O.M.A. சோட்டோக்கான் கராத்தே, வடமராட்சி)
திரு.த.குருபரன்
(நாவலர் விளையாட்டுக் கழகம், தும்பளை)
திரு.N.விஜமோகன்
(உதயதாரகை உடற்பயிற்சி நிலையம், கற்கோவளம்)
திரு.த.மதன்
(குங்பு.செ.தி.கான் மார்ஷல் ஆட்ஸ் கிளை
பருத்தித்துறை)
திரு.மு.பிறேம்குமார்
(சித்திவினாயகர் விளையாட்டுக் கழகம், சுப்பர்மடம்)
திரு.க.புலேந்திரன்
(பீமனேன் கரலாக்கட்டை உடற்பயிற்சி நிலையம்)
திரு.தே.தேவராஜன்
(ஆலோசகர், துள்ளுமீன் விளையாட்டுக் கழகம்)
திரு.K.சிவானந்தம்
(S.M.S.E. கொலனி - திருச்சி தமிழ்நாடு)
உயர்திரு. கெங்காபதி (மல்யுத்த ஆசிரியர்)
திரு.ஆ.செல்லவினாயகம் (மல்யுத்த ஆசிரியர்)
திரு.தே.தேவராஜேந்திரன்
(யோகசாந்தி நிலையம், பருத்தித்துறை)
திருமதி உருத்திரேஸ்வரன் விஜயராணி
(சட்டத்தரணி)
திரு.து.பா.ரவிந்திரன் (JPUM சட்டத்தரணி)
திரு.பொ.இராசதுரை (பொதுசேவையாளர்)
திரு.S.V.ஆறுமுகசாமி (அருள்நெறித் தொண்டர்)
திரு.நா.குகன் (குகன் ஸ்ருடியோ)
திருவாளர் திரு (திரு ஸ்ருடியோ)

பருத்தித்துறை நகர வர்த்தக சங்கம்
திருக்குறள் இயக்கம்
M.G.R. பொதுப்பணி மன்றம்



கலாசாரப் பேரவையின் பிரதேச சாகித்திய விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர் பொ.மகாதேவாவுக்கு பேராசிரியர் கூ.சின்னத்தம்பி (தலைவர், கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்) மலர்மாலை அணிவித்து பாராட்டுப் பத்திரத்தை வழங்குகிறார். காலம்:23.10.2000 இடம் :யாழ்/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

## வாழ்த்துச் செய்தி (25.04.1942 - 2

நண்பர் மகாதேவா அவர்களுக்கு அகவை அறுபது ஆகின்றது என்பது கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். இவருக்கு மணிவிழாவா அல்லது மீண்டும் ஒரு பொன்விழாவா கொண்டாடப்படவேண்டுமென்பதை எண்ணிப் பார்த்தேன். இளமையின் இரகசியத்தை நன்கு உணர்ந்தது மட்டுமன்றி மற்றவர்களும் அந்த இரகசியத்தினை அறிந்து பயன்பெற வேண்டுமென்பதற்காக ஒரு நூலே எழுதியுள்ளார்.

எங்களுடைய பாரம்பரிய விளையாட்டுகள், போர்முறைகள் ஆகியன வற்றிலே அவருக்கு ஈடுபாடு இருந்தது. மல்யுத்தம், கபாடி, கரலாக்கட்டைப் பயிற்சிகள் போன்றவற்றிலே மிகுந்த தேர்ச்சியும் உன்னத அறிவும் பெற் றுள்ளார்.

பழகுவதற்கு இனியவர் நண்பர் மகாதேவா. நான் பருத்தித்துறைக்கு இளைஞனாக வந்த காலத்திலிருந்தே அவருடன் தொடர்பு இருந்து வந்தது. பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இறங்கினால் கால்கள் தாமாக றீஸ்கபே நோக்கிச் செல்லும். அங்கு மகாதேவா இனிய சிரிப்புடன் வர வேற்பார். இன்றும் அந்தத் தொடர்பு நீடித்து நிலைத்து வருகிறது.

அறுபது அகவையினை அடையும் நண்பர் மகாதேவா ஒரு சுற்று வாழ்க்கை வட்டத்தை நிறைவு செய்து, அடுத்த வட்டத்தினுள் நுழைகின்றார். அவர் மேலும் பல ஆண்டுகள் வாழ்த்து செயற்கரிய செய்பவர்கள் வரிசை யிலே நின்று, புகழ் பெற என்னுடைய மனம் நிறைந்த வாழ்த்துக்கள். அவ ருக்கு எல்லாவகை நலன் களும்கிடைக்க இறைவனை வேண்டுகிறேன்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
*பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகள் பீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



60 ஆவது வயதில் பொ.மகாதேவா



'இளமையின் இரகசியம்' நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் பொ.மகாதேவா உடற்பயிற்சி செய்து காட்டுகிறார். காலம்: 16.04.2000 இடம்: இந்து மகளிர் கல்லூரி.

## நாற்பது ஆண்டுகள் நற்சேவை புரிந்தவர்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர் திடம்பட மெய்ஞானம் சேர வுமாட்டார் உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன; உயிர் வளர்த்தேன் என்ற திருமூலர் மொழி வழி நின்று நன்னுடல் பேணியும் நாற்பதாண்டுகளாய் ஊரவர்க்கு அக்கலையைக் கற்பித்து வரும் எங்கள் தேவண்ணாவுக்கு இன்று வயது அறுபதாம் ஊரார் சொல்லு கின்றார்கள். உடல் தோற்றம் அது பொய் என்கின்றது. இன்றைய இள மையுடன் என்றும் வாழ்க என பல்லாண்டு பல்லாண்டு என வாழ்த்து கின்றேன்.

அறிவோர் ஒன்றுகூடல் **து.குலசிங்கம்.**



58ஆவது வயதில் பொ.மகாதேவா

## வாழ்த்துச்

மணிவிழாக் காணும் திரு.பொ.மகாதேவா அவர்க உறுப்பினராக இருந்து அதன் செயற்பாடுகளை பல்வேறு விளையாட்டு, உடற்பயிற்சி நிகழ்வுகளில் இளம் தலைமுறையினரும் இத்துறைகளில் சிறந்து அண்மையில் அவர் எழுதி வெளியிட்ட 'இளமையி உடற்பயிற்சிகளைச் செய்து காட்டுவதன்மூலமும் ந வழிகாட்டி வருகிறார்.

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்கள் ப அவர் செயற்பட்டு வருவதையும் அவதானிக்கமுடிகிற இவரது சிறப்புக்களைப் பாராட்டி கௌரவித்து தொடரவேண்டுமென்று இவரை வாழ்த்துவதில் பெரு

பிரதே

## தேவண்ணாவின்

1. வடமராட்சி ஆணழகன் 1965-1967
2. உடற்பயிற்சி ஆசிரியர்
3. நூல் ஆசிரியர் "இளமையின் இரகசி
4. தமிழர் மரபுக் கலையான கரலாக்கட் ஊட்டியவர்.
5. விளையாட்டுப் பயிற்றுநர்.

கபடி - மல்யுத்தம் - கரலாக்கட்டை - பளுத்

நாடக நடிகர்
- ※ தணியாத தாகம் (1974 யாழ்.தமிழா
- ※ அவனும் மனிதன்தான் - 19
- ※ முடியாத முடி - 19
- ※ தைமூர் - 19
- ※ சுதந்திர நாட்டு அடிமைகள் - 19
- ※ நீயுமா?

## தனித்துவம்

கரலாக்கட்டை ஆசிரியர்,

தேவண்ணாவின் வரலாறு ஒரு தனிமனிதனி வடமராட்சியின் வீரவிளையாட்டுகளுடன் சம்பந்தமான யத்தியில் இவரைத் தனித்துவம் மிக்கவராக இனம்

## மணிவிழா மகாதேவா

பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன், உள்ளம் மகிழ் வடமராட்சி ஆண் அழகனாகக் கண்டேன். நாடக நடி அனரனியாக பல பாத்திரங்களில் நடித்து பாத்திரமாக தேவாவின் மல்யுத்தக் காட்சியையும், சண்டைக் காட்

அருகிவரும் தமிழர் மரபுவழி கரலாக்கட்டை உ வொரு வீச்சுக்கும் பெயர் சூட்டிய கரலாக்கட்டை இரகசியம் நூல்' ஆசிரியரைக் கண்டேன். மந்திகை காலத்தில் என்னுடன் கலந்துபேசி இரத்த வங்கிக் குழு வழங்கினார். முன்மாதிரியாக இன்றும் இருந்தபின் கண்த வேண்டும், செயற்படவைக்க வேண்டும் என்று என்னுட தைக் கண்டேன்.

இன்றும் இளமை ஊஞ்சல் ஆடுகின்றது. இன்றும் சில்லுகளும், கரலாக்கட்டைகளும் துள்ளி விளையா வீச, இன்னும் பல விழாக்களைக் காண எல்லாம்வல்ல

அன்புடன் வாழ்

D

## ஒரு நல்ல உதாரண

மணிவிழாக் காணும் திரு.மகாதேவா அவர்கள் மாணவன் என்பதையிட்டு பாடசாலைச் சமூகம் கல்விமான்களை மட்டும் உருவாக்குவதில்லை; ஒரு மா துறைசார் வளர்ச்சிக்கு வழிகாட்டி அத்திவாரமிடுகிற திரு.மகாதேவா. இந்நாளில் பாடசாலையால் திரு பாடசாலையும் புகழ்பெறும் வகையில் இவரது நல் மா வெளிப்படுத்தப்பட்டுள்ளது. திரு.மகாதேவா அவர்க வாழ்த்துகின்றோம்.

யா

# விழாக் காணும்

## துறை, கலைஞர் வட்டத் தலைவன்

# தேவண்ணா

# மகாதேவா



சுதந்திர நாட்டு அடிமை நாடகத்தில் பொ.மகாதேவா



பருத்தித்துறை துள்ளுமீன் கழக கபடி அணித் தலைவராக பொ.மகாதேவா

## - 25.04.2002)

## ச் செய்தி

வா அவர்கள் எமது பிரதேச கலாசாரப் பேரவையின் டுகளை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டுபவர். கழ்வுகளில் சிறந்து விளங்கிய இவர், இன்றைய ல் சிறந்து விளங்க வேண்டுமென்றும் செயற்படுபவர். 'இளமையின் இரகசியம்' என்ற நூலின் மூலமும் மூலமும் நலமான, கட்டான உடலமைப்பைப் பெற

மக்கள் பயன்பெறவேண்டுமென்ற பெருவிருப்புடன் க்கமுடிகிறது. எமது பிரதேச கலாசாரப் பேரவையும் களவித்துள்ளது. இவரது பொதுநலச் சேவை வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**ஆ.சிவசுவாமி**
*பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.*

## வின் சாதனைகள்

-1967

ன் இரகசியம்" - 2000
லாக்கட்டைப் பயிற்சிக்கு புத்துயிர்

டை - பழுத்தூக்கல், உடற்கட்டழுக் கலை.

ழ்.தமிழாராய்ச்சி மாநாட்டில்)
- 1976
- 1980
- 1993
ள் - 1995

## ம் மிக்கவர்

னிமனிதனின் வரலாறாக மட்டும் அமையாமல் சம்பந்தமான வரலாறாகவும் அமைந்து தமிழ்மக்கள் ராக இனம் காட்டி நிற்கின்றது.

**பா.இரகுவரன்**
Sc.(TRD), B.A.(HONS)
ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

## தவாவுக்கு மணிவிழா

ளம் மகிழ்வடைகிறேன் 1965ஆம் ஆண்டின் முதல் நாடக நடிகராக, முத்துலாக, கௌசினாக, மார்க் பாத்திரமாகவே மாறிய நடிகரைக் கண்டேன். மகா டைக் காட்சியையும் மேடையில் கண்டுகளித்தேன். கட்டை உடற்பயிற்சிக்கு புத்துயிர் அளித்து ஒவ் க்கட்டை ஆசிரியரைக் கண்டேன். 'இளமையின் மந்திகை ஆஸ்பத்திரியில் நான் சேவையாற்றிய வங்கிக் குழுவை ஆரம்பித்து பலருக்கு இரத்ததானம் தயின் கண்தானம் வழங்கும் அமைப்பை உருவாக்க ன்று என்னுடன் தொடர்புகொண்டுள்ள அன்புள்ளத்

து. இன்றும் மகாதேவாவின் கரங்களிலே இரும்புச் விளையாடுகின்றன. மென்மேலும் இளமை ஒளி லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன். டன் வாழ்த்தும்

*வைத்தியக் கலாநிதி*
**Dr.க.மயில்வேறும்பெருமான்.**

## தாரண புருஷர்

அவர்கள் யா/வேலாயுதம் ம.வியின் பழைய சமூகம் பெருமையடைகிறது. ஒரு பாடசாலை ல; ஒரு மாணவனிடத்திலே இயல்பாய் இருக்கின்ற வாறமிடுகிறது என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் யால் திரு.மகாதேவாவும் திரு.மகாதேவாவால் து நல் மாணாக்கத் தன்மை பல சந்தர்ப்பங்களில் அவர்களை வாழ்க வாழ்க என உளமார

**A.ஜெகநாதன்.**
அதிபர்
யா/வேலாயுதம் ம.வி., பருத்தித்துறை.

## பூரண ஆளுமைக்கு ஒருவர்!


அவசியமான உடல் வலுவும் உள வலுவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற வர் உயர்திரு.பொ.மகாதேவா அவர்கள். உடற்பயிற்சித்துறை, கலைத்துறை ஆகியவற்றில் மிகுந்த நாட்டமும் ஈடுபாடும் கொண்ட அன்னாரிடம் இத்துறை களில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைந்த மாணவர் பலர். மனித விழுமி யங்களை உரிய வகையிற் கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழும் பண்பாளர் மணிவிழாக் காணும் இவ்வேளையில், அவரை மனதார வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

**வைரமுத்து சுந்தரேசன்**
*ஆங்கில போதனாசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்.*

## உடற்பயிற்சிக் கலைஞர் வாழ்க!

நான் FORUT பருத்தித்துறையில் ஆலோசகராகப் பணிபுரிந்த காலத் தில் திரு தேவா அவர்களை அழைத்து வெளிவாரிப்பட்டப்படிப்பு மாண வர்களுக்கு உடற்பயிற்சிக் கலைபற்றி பல செயலமர்வுகளைச் செய்யக் கூடியதாக இருந்தது. இந்த இளைஞருக்கு இப்போது மணிவிழா! திரு தேவா அவர்களும் அவர்தம் குடும்பமும் நீடுவாழவேண்டுமென்று வாழ்த்து வதில் பெருமகிழ்சியடைகிறேன்.

**இர.சந்திரசேகர சர்மா,**
*திட்ட இணைப்பாளர்,*
*சமூக உளநல நிகழ்ச்சித்திட்டம், சாந்திகம், யாழ்ப்பாணம்.*



தமிழர் மரபுக் கலையின் கரலாக்கட்டை அனுமர் ஆகாய வீச்சு 60 ஆவது வயதில்...

58 ஆவது வயதில்....



இளமையின் நூல் வெளியீட்டு விழாவில் பாராட்டு

இளமையின் நூல் வெளியீட்டு விழாவில் உடற் காட்சி.

## ஆற்றல் பெற வாழ்த்துகின்றோம்

ஆயகலைகளில் அரியகலைகண்டு
அருகிவிடாது அறுபது அகவுவரை
ஆற்றிய சேவையில் அகமகிழ்ந்துனை
ஆற்றல் பெற மேன்மேலும் வாழ்த்துகின்றோம்

**க.கமலசேகரம்.**



தைமூர் நாடகத்தில் போர்வீரனாக..

(3214)

## இளைஞர்களுக்கு வழிகாட்டி!

பொன்னுச்சாமி மகாதேவா அவர்களின் இளமைக்காலம் தொடக்கம் இன்றுவரை அவரை நன்றாக அறிந்தவர்களில் நானும் ஒருவன் என்றதில் மனமகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். அவர்களின் முக்கிய விடயம் - உடற்பயிற்சி, கரலாக்கட்டைப் பயிற்சி, கட்டழகுப் பயிற்சி, இளமையின் இரக சியம் இதற்கு வித்திட்டவர் அவரின் உடற்பயிற்சி ஆசிரி யராக இருந்த அமரர் சு.கதிர்காமத்தம்பி ஆவார்.

ஆசிரியரின் வழிகாட்டலில், அவரைக் குருவாகக் கொண்டு பாடசாலை நாள்களில் மல்யுத்த பயிற்சியில் ஈடுபாடு கொண்டு மல்யுத்தப் போட்டிகளில் வெற்றிபெற்று விரவாகை சூட்டப்பட் டது. தொடர்ந்து பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தில் சேர்ந்து தனது முயற்சியால் உடற்கட்டழகுக் கலை யினை மிக மேன்மையான முறையில் பயின்று முன்னேறினார்.

இதன் காரணமாக, 1965ஆம் ஆண்டில் வடமராட்சியில் முதன் முதலாக ஓர் ஆணழகனாக தெரிவுசெய்யப்பட்டார். இது ஒரு போற்றற்குரிய விடயமாகும். கபடி வீரனாகத் திகழ்ந்து கபடி விளையாட்டில் மத்தியஸ்தகராகவும், ஆலோசகரா கவும் இருந்து வருகிறார். கரலாக்கட்டை மூலம் தமிழர் மரபுவழி உடற்பயிற்சியை வளர்த்து வருபவர் அவர் .

தேவரின் அன்பு ஆதரவு, நல்லெண்ணம் நற்பழக்கம் ஆகியவற்றை நான் அனுபவித்துள்ளேன். இவர் போல் ஏனையோரும் ஒவ்வொரு துறையில் மிளிர வேண்டுமென ஆசைப்படுகிறேன் தேவர். இளம் சந்ததியர்க்கு ஓர் உதாரண புருஷராக இன்று இருந்து வருகிறார். மேலும் தனது திறமைகளை வெளிக் கொணர்ந்து நாட்டுக்கும் எமது மண்ணுக்கும் இளைஞருக்கும் வழிகாட்டியாகத் திகழ வேண்டுமென எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் V.K.கணேசலிங்கம்**
B.Sc.(Hons) ceylon, M.Sc. (Hawaii), Ph.D.(London)
தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒலுவில் (அம்பாறை)
(முன்னாள் பேராசிரியர் - யாழ்.பல்கலைக்கழகம்)

## புத்துயிர் அளித்தவர்!

பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழக ஆரம்ப உறுப்பினர் 'பொ.மகாதேவா அவர்களுக்கு 60 ஆண்டு அகவை பூர்த்தியாகும் வேளை பல்லாண்டு காலம் இன்னும் வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன். இவர் ஒரு விளையாட்டு வீரனாய், நடிகனாய், உடற்கட்டழகு வீரனாய்த் திகழ்ந்து வருகிறார். அருகிவரும் தமிழர் மரபுவழி உடற்பயிற்சிக்கும் புத்துயிர் அளித்து, இளமையின் இரகசியத்தைப் பேணிப் பாதுகாத்து வருவது மிகவும் போற்றத்தக்கது. இவர் யாழ்.மாவட்டத்தில் கரலாக்கட்டை என்னும் உடற்பயிற்சி நிகழ்வுக்கு புத்துயிர் அளித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம்,**
மாவட்ட விளையாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்.

## பயிற்சியை அறிமுகம் செய்த பண்பாளர்

அன்பர் பொ.மகாதேவாவை நான் சிறுவயதில் இருந்தே அறிவேன். இவர் ஐந்தில் வளைந்தபடியால் 50க்கு மேலும் வளைந்து, உடலை வளைத்து ஆற்றிய பயிற்சிகள் அளப்பரியன. குறிப்பாகக் காலம் காலமாகப் பேணப்பட்டுவந்த தமிழர் மரபு வழி உடற்பயிற்சியான கரலாக் கட்டைப் பயிற்சியை எம்மிடையே அறிமுகம் செய்தமைக்கு நாம் நன்றியுடையோம்.

**திரு.K.பாலசுப்பிரமணியம்**
*செயற்றிட்ட முகாமையாளர், வடமாகாணம், இலங்கை வங்கி, கொழும்பு.*

## தேர்ச்சி பெற்ற திறமைசாலி

உயர்திரு.பொ.மகாதேவா அவர்கள் பருத்தித்துறையில் பிறந்து இந்த வடமராட்சிப் பகுதி வாழ் இளைஞர்கள் - யுவதிகளின் உடல்வளப் பேணுகைக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். அவர்களின் நன்மை கருதி 'இளமையின் இரகசியம்' என்னும் உடல்வள நூலை எழுதியவர். இவர் பல்துறை விளையாட்டுக்கள் குறிப்பாக கபாடி, மல்யுத்தம், உடற் கட்டழுக் கலை, கரலாக்கட்டை சுழட்டுதலில் தேர்ச்சி பெற்றார். இன்று இவர் தனது வாழ்நாளில் மணிவிழா கொண்டாடும் நிலைக்கு உயர்ந் துள்ளமை கர்த்தரின் நற்கருணையே. அவரை இப்பங்கின் உதவித் தந்தையாய் நின்று வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**அருட்திரு.செ.றோய் பேடினன்**
*உதவிப் பங்குத் தந்தை, பருத்தித்துறை.*

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

எத்தகைய செல்வங்கள் புகழ்கள் இருந்தாலும் மனிதன் நோயற்றவனாக இருத்தல்வேண்டும். அவன் நோயற்றவனாக இருப்பதற்கு உடல் நலம் பேணப்படல்வேண்டும், இல்லாவிட்டால் சகல செல்வங்களும் வீணானவை யாகவே கருதப்படும்.

ஆகவே, மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் நீண்டகால ஆரோக்கிய வாழ்வுக்கும் பல வகையான அறிவுறுத்தல்களை மகாதேவாவின் இரகசிய நூலில் காணக்கூடியதாக இருக்கிறது. மணிவிழா நாயகனை மனமார வாழ்த்துகின்றேன்.

**திரு.மா.நடராசசுந்தரம்**
*பீடாதிபதி, முகாமைக் கற்கையியல், வணிகபீடம், யாழ்.பல்கலை.*

## சித்ரூபானந்தாவின் ஆசி!

திரு.பொ.மகாதேவா அவர்கள் கலைஞர் வட்டத்தைச் சேர்ந்தவர். இவருக்கும் இவரது மனைவிக்கும் ஏனையவருக்கும் அங்கத்தவர்களுக் கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்!

சிவத்தொண்டில் ஈடுபட்டு இன்றும் அடியேனை இவர் பல வருடங்களாக அறிவார். ரொம்பவும் ஊக்கமும் உற்சாகமும் உழைப்பும் மிக்கவர். எங் களுக்குள் தெரிந்த மட்டில் காலத்தைப் பொன்போன்று மதித்த இவர் சமுதாயத்தில் ஆற்றிய பணி என்றும் போற்றுதற்கும் பெருமைக்கும் உரியன.

*அன்னையின் அடியவன்,* **சித்ரூபானந்தா.**

## ஆக்கமும் ஊக்கமும் தந்த அன்பர்

எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் அன்பர்களில் திரு.மகாதேவாவும் ஒருவர். குறிப்பாக நாடகத்துறை அவரது ஒத்துழைப்பினால் மேன்மை கண்டுள்ளது. இந்த வகையில் எமது கல்விச் சமூகத்தின் சார்பில் அவரை இன்னும் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துவதில் மனநிறைவு அடைகின்றேன்.

அன்னார் வயதால் ஏற்படும் தளர்வினை ஒரு சவாலாக ஏற்று இது நாள்வரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்; இன்னும் வாழ்வார் சமூகத்திற்கு அவரது சேவை தொடரவேண்டும்.

அன்பர் **அ.கனகரத்தினம்,** *அதிபர்.*

**மலர்க்குழு**
மா.நடராஜசுந்தரம் வை.சுந்தரேசன்
க.கமலசேகரம் இரா.பஞ்சலிங்கம்
(கலைஞர் வட்டச் செயலாளர்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடற்றவன்

“வீடற்றவன்” நாவலின் விளக்கமும் விமர்சனமும், எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. இந்த நூலை வாசித்தால் “வீடற்றவனில்” கேட்கக்கூடிய எல்லா வினாக்களுக்கும் விடையெழுதலாம். விலை ரூபா 25.00. (3215)

### வாடகைக்கு

தட்டாதெருச் சந்திக்கருகில் உள்ள இரண்டு பெரிய கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: P.கமலாதேவி, 21, சீனியர் லேன், அரசடி வீதி, யாழ்ப்பாணம். **T.P.: 2501.** (3263)

### கைமாறிவிட்டது

55646638 என்ற இலக்கமுடைய லுமாலா சைக்கிள் (பெண்களுடைய) மருத்துவபீடத்தில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெற்ற அன்று கைமாறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து 651, K.K.S. றோட், பூநாறி மரத்தடி. Tel. No.2537 என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3259)

### வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள், புதிய வகுப்புகள் ஆரம்பம: 30.04.2002. தொடர்பு: 5, அம்மன் வீதி, வைரவர் கோயில் முன்பாக, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (3234)

### தவறிவிட்டது

முகமாலையிலிருந்து 23.04.2002 அன்று யாழ்ப்பாணம் வரும் தட்டி வானில் வரும்போது க.தயாளம் என்பவருடைய சிவப்புத் துணி கட்டிய ரவலிங் பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அல்லது மாறிக் கொண்டு போனவர்கள், K.குலசிங்கம், சாரதா லேன், கட்டுடை, மானிப்பாயில் ஒப்படைத்து உதவவும். (3271)

பாலாவோடை, களபூமி, காரைநகரைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிவதர்சன் என்பவருடைய தே.அ.அ. (இல.82237168V), கடற்படையினரின் அடையாள அட்டை (இல.024750), விசேட அ.அ. (இல.091303009) என்பன நீராவியடிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.சாம்பசிவம், 42, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (3274)

## குருக்களுக்கு பட்டம் வழங்கி கௌரவிப்பு

வலிகாமம் தெற்கு,ஏப்.29

எழுதுமட்டுவாழ் பெரியகேணிப் பிள்ளையார் ஆலய குருக்கள் சிவஸ்ரீ க.நாகேஸ்வரக்குருக்கள் ‘கிரியா கலாமணி’ என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை வெகுசிறப்பாக நடத்தி முடித்தமையைப் பாராட்டி இக்கௌரவப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலய பரிபாலன சபையினர் சார்பாக, அதன் செயலாளர் இ.கு.ரவீந்திரா, குருக்களுக்கு பொன்னாடை போர்த்தி பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். (எ-152)

## அதிபர் தெரிவு நேர்முகப்பரீட்சை

வலிகாமம் தெற்கு,ஏப்.29

அராலி கிழக்கு அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, ஆனைவெட்டி சதானந்தா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு அதிபர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-152)

## நெசவு நிலையங்களுக்கு நூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தொழிற்றுறைத் திணைக்களத்துக்குச் சொந்தமான நெசவு நிலையங்களுக்கு அண்மையில் ஒரு தொகுதி நூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நூல்கள் யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் வைத்து சம்பந்தப்பட்ட நிலையங்களின் பொறுப்பாசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஏ)

# பேரழிவைச் சந்தித்துநிற்கும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் மீண்டும் பொலிவுபெற ஆக்கபூர்வமான முயற்சிகள் தேவை

ஏ-9 வீதியூடாக ஊடறுத்துச் செல்லும் எழுதுமட்டுவாழிலிருந்து ஆனையிறவு வரையுள்ள பிரதேசம் பச்சிலைப்பள்ளி பிரதேசமாகும். ஆனையிறவுப் படையினருடன் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட யுத்தங்களாலேயே இப்பிரதேசம் முழுவதும் அழிவுக்குள்ளானது எனலாம். 10 வருடங்களுக்கு முன்பே ஆனையிறவுக்கு அண்மையான - இயக்கச்சியை மையமாகக் கொண்ட பிரதேசங்கள் இராணுவத்தின் வசமாகி மக்கள் வெளியேறியதன் மூலம் நாசமாகி விட்டன.




இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏ-9 கண்டி வீதி இத்தாவில் பகுதியில் துண்டிக்கப்பட்டு தொடர்ந்து, நடைபெற்ற தாக்குதல்கள் காரணமாக பளை நகரத்தை மையமாகக் கொண்ட கிராமங்களும் பெரும் அழிவுக்கு உள்ளாகின. 26.03.2002 இல் ஏ-9 வீதி துண்டிக்கப்பட்டது முதல் அக்கினிச் சுவாலை வரை ஏழுக்கும் மேற்பட்ட சமர்கள் நடந்து முடிந்துள்ளன. வேறு எங்கும் பயன்படுத்தாத, அதிநவீனரக ஆயுதங்கள் அனைத்தும் இப்பிரதேசத்தில்தான் இரு தரப்பாலும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இங்கு ஏற்பட்டுள்ள அழிவுகளைக் கொண்டு உணரமுடிகிறது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளைவிட மிகப் பயங்கரமான - கொடூரமான அழிவுகள் முகமாலை, இத்தாவில், இந்திராபுரம், வேம்பொடுகேணி, கிளாலி, அரசர்கேணி, கச்சார் வெளி போன்ற கிராமங்களில் ஏற்பட்டுள்ளன. இங்குள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள், பாடசாலைகள், அரச மற்றும் பொது அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள், வீடுகள், வீதிகள் அனைத்தும் புனரமைக்க முடியாத அளவுக்கு முற்றாகச் சிதைந்து போய்க் காணப்படுகின்றன. ஒரு சில வீடுகளில் சுவர்கள் இடிந்து போய்க் காணப்பட்டாலும் கூரையோ, ஜன்னல்களோ, கதவுகளோ காணப்படவில்லை.

இந்த அழிவுகள் போதாது என்று இப்பகுதியில் காணப்பட்ட லட்சக்கணக்கான தென்னைகள், பனைகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளன. இவற்றோடு பயன்தரும் பலா, மா போன்ற பழமரங்கள் யாவும் அழிந்து போயுள்ளன. இங்குள்ள மக்களால் வளர்க்கப்பட்ட ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகளும் முற்றாக அழிந்துபோய்விட்டன. பல்குழல் எறிகணைகளின் தாக்குதல் காரணமாக இத்தாவில், முகமாலைக் கிராமங்களை அண்டிய பிரதேசங்கள் அழிந்துவிட்டமையே இப்பேரழிவுக்குப் பிரதான காரணமாக அமைந்துவிட்டன.

இங்குள்ள மக்களின் வருவாய்க்கும், தொழில் வாய்ப்புக்கும் காரணமாக இருந்த தென்னை, பனை போன்ற பயன்தரும் மரங்களும், கால்நடைகளும் அழிந்துபோயுள்ளமையும் மற்றும் அழிந்துபோயுள்ள உடைமைகளும் இம்மக்களின் எதிர்கால வாழ்வை சூனியமாக்கியுள்ளதோடு உளவியல் ரீதியான பெரும்பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்பிரதேசம் நிலக்கண்ணிகள் மற்றும் வெடிப்பொருள்கள் நிறைந்த மிக ஆபத்தான பிரதேசமாக உள்ளமையால், தமது அழிந்த வீடுகளைப் பார்வையிட முடியாத நிலையில் மக்கள் திரும்பிச்செல்லும் பரிதாப நிலையைக் காணமுடிகிறது.

விடுதலைப் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றுவதற்காகவும் படையினர் அதைத் தக்கவைப்பதற்காகவும் நடைபெற்ற பெரும் சமர்கள் உண்மையில் ஏ-9 பாதை துண்டிக்கப்பட்ட இத்தாவில் பகுதியை அண்டியே நடைபெற்றது என்று கூறின் அது மிகையாகாது.

செய்தியாளர்கள், மனிதநேய அமைப்பினர், அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் சர்வ தேச தொண்டர் அமைப்பினர் போன்றோர் கொடூர மான அழிவைச் சந்தித்துள்ள மேற்கூறிய பிர தேசங்களை ஏ-9 கண்டி வீதியிலிருந்து சிறிது தூரம் உள்ளே சென்று பார்ப்பதன் மூலம் இப்பேரழிவின் கொடுமையை உணர்ந்துகொள்ள முடியும்.

**சரஸ்வதி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் இத்தாவில் - பளை.**

தமது எதிர்காலம் சூனியமாகியுள்ள இப்பிரதேச மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடியதாக, இங்கு விதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகளை அகற்றி மக்கள் மீளக்குடியமர, அவர்களுக்கு புனர்வாழ்வளிக்க விடுதலைப் புலிகள் அமைப்பினரும், அரசாங்கமும், மனிதநேய மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் மிகுந்த அக்கறை செலுத்தி உதவி புரிய வேண்டுமென பச்சிலைப்பள்ளிப் பகுதிவாழ் மக்கள் அனைவரது சார்பாகவும் வேண்டி நிற்கிறோம்.


**கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி ஆலய**

## பாராட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

இடம்:- கல்வியங்காடு வீரபத்திரர் ஆலயம்
காலம்:- இன்று (29.04.2002) திங்கள் மாலை. 5.30 மணி.
தலைவர்:- திரு.கோ.சிவசுந்தரமூர்த்தி *(பரிபாலன சபைத் தலைவர்)*
பிரதமவிருந்தினர்:- உயர்திரு. து.வைத்திலிங்கம் அவர்கள் *(மேலதிக அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம்)*
கௌரவ விருந்தினர்:- உயர்திரு. மு.திருநாவுக்கரசு அவர்கள் *(விகடகவி, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)*

ஆலய மஹோற்சவ காலங்களில் பெரியபுராண தொடர் தெய்வீகச் சொற்பொழிவு நிகழ்த்திய சைவப் புலவர் ஏ.அனுசாந்தன் B.A. (Hons) அவர்களை கௌரவித்தல்.
சமய அறிவுப் போட்டியில் சித்திபெற்றவர்களுக்கான பரிசில்கள். சான்றிதழ்கள் வழங்கல்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்

*விளம்பர அனுசரணை:*
திரு. வைத்திலிங்கம் சுரேஸ்குமார்.
*“குமுதகிரி”, புலவனார் வீதி, கல்வியங்காடு.* (3272)



## பன்னிரெண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25 - 09 - 1929
உதிர்வு 12 - 05 - 1990

### அமரர் செல்லத்துரை வரதலிங்கம்

(இளைப்பாறிய அதிபர், யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்)

திதி: 2002-04-29

*117/4, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (3278)

என்றும் பசுமையான நினைவுகளுடன்: குடும்பத்தினரும், சகோதரியும்.



## கண்ணீர் அஞ்சலி

இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி பாக்கியலக்சுமி நடராஜா அவர்களின் அருமைத் தாயார்

### அன்னலக்சுமி நடராஜா அவர்கள்

25-04-2002 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம். பிரிவுத்துயரால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்கள் - இசை, நடனம், சித்திரவடிவமைப்புத்துறை, மூத்த விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள்.
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்.பல்கலைக்கழகம். (3273)



## FORUT - JAFFNA

Vacancy: **Post of Project Co-ordinator (PC)**

There exists a vacancy for the Post of PC at our office in Point Pedro.

**Major Responsibilities:**

- General administration/management of the office, including financial management.
- Accountable and transparent programme implementation (construction and community development)
- Personnel management, including staff development.
- Appropriate monitoring and reporting in English.

Applicants must be below the age of 50, with at least A/L, preferably University degree and substantial administration/management experience preferably from related fields.

Applications must reach:

**Programme Manager, FORUT,**
*67, Temple Road, Jaffna.*
before 15th May 2002

Women are encouraged to apply,
Only shortlisted candidates will be called for interview.

(3147)



## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராசா இராணிமலர்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா இராணிமலர் 27.04.2002 சனிக்கிழமை இரவு 10.30 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் பொன்னையா தங்கராசா (ஓய்வுபெற்ற S.D.W. கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் கோசலாஜினி (2ஆம் வருடம், சமூகவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புத் தாயாரும் கணேசராசா (ஓய்வுபெற்ற அதிபர், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் மகாதேவிமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கலைவாணி அமிர்தலிங்கம், மதிவாணி, ஈஸ்வரன், ஜெயவாணி, மயூரேசன் (திருகோணமலை), நிர்மலா நடராசா (மலேசியா), மகேஸ்வரன் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற தையல்நாயகி சிவதர்மன் (மலேசியா), நாகலட்சுமி சிவநேசன், காலஞ்சென்ற நாகரத்தினம் பொன்மணி ஆகியோரின் மைத்துனியும் அமுதீசனின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2002) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.தங்கராசா *(கணவர்)*,
த.கோசலாஜினி *(மகள்)*

*ஏழாலை மேற்கு* (3277)



# நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
# மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா சிறப்பிதழ்
# 29-04-2002

## மஹா கும்பாபிஷேகப் பிரதம குருவின் அருளாசி!

*"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடி கணபதி வர அருளினன் மிகு கொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"*

ஸ்ரீ சிந்தாமணி விநாயக மஹா கும்பாபிஷேகத்தினை நடத்தும் பெரும் பேற்றை எமக்குத் தந்த திருவாக்கும் இறையருளும் கும்பாபிஷேகச் சிறப்பும் மக்களின் சிறப்பும் சைவசமய உலகத்தில் சிறப்புற எனது பிரார்த்தனையையும் நல்லாசியையும் திரிகரணசுத்தியுடன் சமர்ப்பிப்பதுடன் பெரும்சாந்தி விழா சிறப்புற நடத்த உதவிய பக்தப் பெருமக்கள் அனை வருக்கும் எல்லாம்வல்ல சிந்தாமணி விநாயகரின் திரு வருள் பெற வேண்டுகிறேன்.

*பிரதிஷ்டா சிரோன்மணி*
சாமி விஸ்வநாதக்குருக்கள்
*நவாலியூர்.*


## நவாலியூர் நாதனவன் நல்லருளைப் பாலிப்பான்

1\. பூந்தமிழின் புலவரொடு புரவ லர்கள்
புடை சூழும் நாவலியூர் தன்னில் மேவும்
வேந்தன்சிந் தாமணிவி நாய கரும்
விளங்குதிருக் கோயில்கும் பாபி ஷேகம்
சாந்தமுடன் சமாதானம் நாட்டில் நல்கி
சகலருமே சுபீஷமுடன் நீடு வாழச்
சேந்தனவன் சகோதரனாம் சிந்தா மணிச்
சிற்பரவி நாயகனும் அருள்வான் நன்றே

2\. வேதவிதி முறையான குடமு முக்கு
வேழமுகன் சிந்தாமணி விநாய கனும்
பூதலத்தில் மனங்குளிர்ந்தே பக்த ருக்கே
பொலிந்தருளைப் பொழிந்திடுவான் நீடு வாழ
வேதியர்கள் பக்தியொடு விநாய கரை
வேண்டிக்கும் பாபிஷேகம் செய்யப் பூத
நாதனவன் சிந்தாமணி விநாய கரும்
நல்லருளைப் பாலிப்பான் நாடு ஓங்கும்

3\. பஞ்சமுக விநாயகனார் பாதம் போற்றப்
பரிந்தருளை நல்கிடுவார் பாபம் நீங்கும்
தஞ்சமென அடைந்தவர்க்கே தாளி ணைகள்
தந்திமுகன் தந்தருளைப் பொழிந்தி டுவான்
அஞ்சலென நவாலியூர்ச் சிந்தா மணி
ஆனைமுகன் அருள்தருவான் வாரீர் வாரீர்
குஞ்சரனாம் விநாயகனின் பாதம் போற்றிக்
கும்பிடுவோம் நவாலியூர்க் கோயில் வாரீர்

*கவிமாமணி, மஹாவித்துவான்*
பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் M.A., J.P



## நமக்கருள் புரியும் நவாலியூர் பெருமான்

ஈழத்தின் கேந்திரமாய் விளங்குகின்ற யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நவா லியூரில் மன்வயிர்களில் மேற்கொண்ட பெருங்கருணையினால் முழு முதற் கடவுளாகிய சிந்தாமணி விநாயகப்பெருமான், நாற்றைம்பது ஆண்டு களுக்கு முன்னரே கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார். இவ்வாலயம் அமைப்தற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே புளிய மரத் தைத் தலவிருட்சமாகக் கொண்ட கற்கட்டு வைரவர் கோயில் உளது. சிவாசாரியார் கணபதீசுவரக்குருக்களே இதன் உரிமையாளராவர்.

இவர் மெய்யன்போடு பாரதநாட்டுத் தீர்த்த யாத்திரை செய்து காசி விசுவநாதப் பெருமானை வணங்கி நிற்கும்பொழுது கைமேற் கண்ட பலனாக ஒரு பிராமணப் பெரியார் இங்கு ஸ்தாபிக்கப்பெற்ற விநாயகப் பெருமானின் சிலையைக் கொடுத்துப் பூசிக்குமாறு கூறினார். இவரது இளைய புதல்வர் விசுவநாதக் குருக்கள் ஆலயம் அமைத்து, முன்னேசுவரக் குமாரசாமிக் குருக்களாற் பிரதிட்டை செய்வித்தனர். இவ்விசுவநாதக் குருக்கள் நல்லூரிற் புகழ்மிக்க தம்பையாக் குருக்களெனப் பெயர் பூண்ட கார்த்திகேயக் குருக்களின் சகோதரியாகிய பதிவிரதா சிரோமணி விசாலாட்சி அம்மையாரைக் கடிமணஞ் செய்து, முறை தவறாது ஆலயத்தையும், இல்லறத்தையுஞ் செவ்வனே நடத்திவர, விக்கினங்களைத் தீர்க்கும் எம்பிரானது திருக்கருணையினாலே தவப் புதல்வராகிய சோமசுந்தரக் குருக்கள் உதித்தனர்.

இவர் சகல கலைகளையும் கலைவிற்பன்னராகிய இவரது மாமனார் சிவாசாரியார் கார்த்திகேயக் குருக்களிடத் திறம்படக் கற்றார். கற்றதைச் செயற்படுத்தும் அரிய திறன் இவரிலிருந்தது. இவர் ஆலயத்தை நாளடைவிற் சைவாபிமானிகளின் உதவியுடன் எல்லா வகையிலும் வளரச் செய்து, 1921ஆம் ஆண்டில் நா.சிவசுப்பிரமணியக் குருக்கள், நல்லூர் கார்த்திகேயக் குருக்கள் ஆகியோரால் கும்பாபிடேகஞ் செய்வித்தனர். வருடந்தோறும் பத்து நாள்களுக்கலங்காரத் திருவிழா நடத்திப் பின் 1940ஆம் ஆண்டு தொடக்கங் கொடியேற்றம், தேர், தீர்த்தம் ஆகிய திருவிழாக்கள், மகேசுவரபூசை, புராணபடனங்கள், கஜமுகசூரசங்காரம் என்பன நடைபெறச் செய்தனர். தாம் கண்ட காட்சிக்கமைய 1950ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் ஐந்துமுக விநாயகப் பெருமானது திருவுருவத்தை முதன்முதலாக இலங்கையில் வண்ணை இராமகிருட்டிண ஆசாரியைக் கொண்டமைத்து இவரது மைத்துனர் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கா.கைலாசநாதக் குருக்களாற் கும்பாபிஷேகஞ் செய்வித்தும், விநாயக சட்டிவரை 21நாள்களும் ஐந்து சிவாசாரியார்களைக் கொண்டு இலட்சார்ச்சனை வருடந்தோறும் நிகழ்த்துவித்தும் வந்தனர்.

சாதாரணவருடம் பங்குனிமாதம் 17ஆம் திகதி விமரிசையாக வேத முறைப்படி இனிது நிறைவேறிய மகா கும்பாபிஷேகத்திற்குரிய யாகசாலைகள், வேதிகைகள் ஆகிய எல்லாவற்றையும் முறைப்படி அலங்காரமாக அமைத்து, கிரியைகளை ஆகம விதிப்படி வழுவின்றிச் செய்ய ஏழு நாள்களுக்கு அவற்றைப் பிரித்து வைத்தும், வியாகரண சிரோமணி வேத விற்பன்னர் பிரம்மசிறீ சீதாராம சாத்திரிகளின் ஒழுங்கின்படியும், கலாநிதி கா.கைலாசநாதக் குருக்களின் ஆலோசனைப்படியும், பக்தி, தூய்மை, அறிவு ஆகியவை அமையப்பெற்ற சிவாசாரியார் சாமி விசுவநாதக்குருக்கள் பிரதம குருவாகவும், வேறு சிறந்த எட்டுக் குருக்கள்மார் அவருக்குதவியாகவும், வேத உபாத்தியாயர் பிரம்மசிறீ சுப்பிரமணிய சாத்திரிகளும் மற்றுந் தகைமை வாய்ந்த குருமார்களும் வேத பத்ததி வாசிக்கவும், வேதபாராயணஞ் செய்யவும், பல அந்தணர்கள் துணைபுரியவும், சைவப் பெரியார்கள் திருமுறை ஓதவும், நடைபெற்ற கிரியைகளும், காட்சிகளுங் கண்கொள்ளாக்காட்சிகளே. இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மருக்கொழுந்து, செவ்வந்தி, மரு, தாழம்பூ, அலரிமலர், நவரெலியாச் செவ்வந்தி, உள்ளூர்ச் செங்கழுநீர், நீலோற்பலம், செந்தாமரை, உரோசா ஆகிய மலர்களால் ஆக்கப்பட்ட ஆரங்களைச் சூடிய ஐந்து கும்பங்களும், விசிறி, சாமரை, குடை, கொடி, ஆலவட்டம், மகரதோரணம், கற்பூரதீபம், சாம்பிராணித் தூபம், நறுமணங்கமழும் பன்னீர், வேதபாராயணம், திருமுறையோதல், உயர்தர மேள வாத்தியம், சங்குநாதம் ஆகிய வரிசைகளுடன் வீதிவலம் வந்த காட்சி வருணனைக்கு அப்பாற்பட்டதே. இவ்வித வேதமுறைப்படி நடக்குங் கும்பாபிஷேகங்கள் அரிதிலும் அரியவே. அன்றைய மாலைத் திருவூஞ்சலும் தண்டிகையில் எழுந்தருளிய திருவுலாக்காட்சியும் தனிப்பெருமையுடையன. முறைப்படி கும்பாபிஷேகம் நடந்தேறியதென்பதற்கறிகுறியாக "வான்முகில் வழாது பெய்க" என்பதற்கமைய மழை பொழிந்தது.

சைவம் ஓங்குக! சைவக்கலை பெருகுக!! சைவநெறி விளங்குக!!!

*சிவம்*

*சிவநெறிப் புரவலர் முதலியார்*
வை.மகேசன்.

## அட்டகிரி ஆலயகுருவின் ஆசி

இப்பூவுலகின் கண்ணே சகல ஆன்மகோடிகளும் வழிபட்டு திருவருட்சக்தியைப் பெற்று அதன் வாயிலாக நல்வாழ்வுக்கு வழி வகுக்கும் நவாலியூர் என்னும் இடத்தில் ஆலயம் அமைத்து, பெருந்தகையாகிய ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானை ஸ்தாபித்து, இன்று நடைபெறும் மஹா கும்பாபிஷேகமானது அவனருளாலே அவன்தாள் வணங்கி சிந்தாமணி விநாயகரது பெருமையும் மக்கள் உள்ளங்களில் சிறந்து மலரவேண்டும் என நினைத்து விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

*"மேன்மை கொள் சைவநீதி*
*விளங்குக உலக மெல்லாம்"*

சுபம்

பிரம்மஸ்ரீ கா.துரைச்சாமிக்குருக்கள்
*அட்டகிரி முருகன் கோயில் பிரதம குருக்கள்*

### சித்திரை மாதம் 16ஆம் நாள் (29.04.2002) திங்கட்கிழமை

| | | |
|---|---|---|
| *காலை 8.00 மணிக்கு* | : | விக்னேஸ்வரப் பூஜை, புண்ணியாக வாசனம், யாக பூஜை, மகா பூர்ணாகுதி, யாக விஷேட தீபாராதனை, வேத ஸ்தோத்திர தேவார பாராயணம், ஆசீர்வாதம், நாதாஞ்சலி. |
| *காலை 9.30 மணிக்கு* | : | ஸ்தூபிகள் அபிஷேகம் |
| *காலை 10.00 மணிக்கு* | : | பிரதான கும்பம் வீதிப் பிரதட்ஷணம் மூலாலயப் பிரவேசம், வேதோக்த நியாசபூர்வ கும்பமூர்த்தி சம்யோசனம், கிரகப் பிரீதி, மஹா கும்பாபிஷேகம், பஞ்சமுக விநாயகர் கும்பாபிஷேகம், வைரவர் கும்பாபிஷேகம், பதிகம் பாடி கதவு திறத்தல், கோ தரிசனம், பக்தஜனதரிசனம், எஜமான் அபிஷேகம், ஆசியுரை, பிரசாதம் வழங்கல். |
| *பகல் 12.00 மணிக்கு* | : | மஹா அபிஷேகம், பூஜை, பிரசாதம் வழங்கல். |
| *மாலை 5.00 மணிக்கு* | : | சாயரட்சை பூஜை. |
| மாலை 6.30 மணிக்கு | : | சுவாமி திருவீதி உலா உற்சவம். |

### நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் சிறப்புற வேண்டுமென்று ஆசியுரை நல்கி வாழ்த்துவோர்:

01\. ஆலய கட்டட அமைப்பாளர்
திரு.க.சண்முகநாதன் அவர்கள்
*"நந்தவனம்",*
*ஊரெழு கிழக்கு.*

02\. ஆலய திருப்பணிச் சபை செயலாளர்
திரு.தர்மலிங்கம் யோகானந்தன் அவர்கள்

03\. ஆலய திருப்பணிச் சபைத் தலைவர்
திரு.ஜெயரட்ணம் கோகலை

04\. ஆலய திருப்பணிச் சபைப் பொருளாளர்
திரு.நல்லையா கந்தவனம்


பானை வயிற்றோனே! பக்தர்களைக் காப்பவனே!!
**சந்திரன் பான்சி பலஸ்**
நவாலி றோட், ஆனைக்கோட்டை. (C/21941)

விக்கினந் தீர்க்கும் விநாயகர் தாள் பணிவோம்!
**கமலா ஸ்ரோர்ஸ்**
பலசரக்கு வியாபாரம், வீட்டுப் பாவனைப் பொருள்கள், ஹாட்வெயர் பொருள்கள் விற்பனையாளர்
நவாலி றோட், ஆனைக்கோட்டை. (C/21942)

கணபதியே வருக! நல்லருளே தருக!!
**ஜெயசுதன் ரெக்ஸ் பல்பொருள் வாணிபம்**
நவாலி றோட், ஆனைக்கோட்டை. (C/21943)

விக்கினந் தீர்க்கும் விநாயகரைப் பணிவோம்!
இன்னிசை சங்கமிக்கும் சாம்ராஜ்யம்
**விக்னா வீடியோ அன் றெக்கோடிங் ஸ்ருடியோ**
நவாலி றோட், ஆனைக்கோட்டை. (C/21944)

கணபதியின் தாள்களைக் கைதொழுது துதிப்போம்!
**பாரதி ஸ்ரோர்ஸ்**
**பல்பொருள் வாணிபம்**
சென்.பீற்றர்ஸ் சேச், நவாலி. (C/21945)

சிந்தாமணி விநாயகரே! சிந்தாகுலந் தீர்க்க வாரீர்!
உருசிமிக்க பிஸ்கட் வகைகளுக்கு நாடுங்கள்
**சீலன் பேக் ஹவுஸ்**
நவாலி வடக்கு, மானிப்பாய். (C/21947)

வினை தீர்க்கும் விநாயகரைத் தாள் பணிந்து ஏத்திடுவோம்!
**ஸ்டைல் கிங் ரெயிலர்ஸ்**
இல.476, 2ஆம் பிரிவு, மருதானை. T.P. 678013. (C/21948)

விக்கின விநாயகா! வினைகள் வேரறுப்பவா!
**மல்லிகா மிக்ஷர் மாளிகை**
*அனைத்து சிற்றுண்டி வகைகளும் சங்கமிக்கும் சாம்ராஜ்ஜியம்*
1kg மசாலா மிக்ஷர் மொ.விலை ரூபா 100/=
1kg மசாலா மிக்ஷர் சில்லறை விலை ரூபா 120/=
உங்கள் நாவினிக்கும் சிற்றுண்டி உணவகம்.
149, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/21940)

அற்புத விநாயகர் நற்பதந் தொழுவோம்
**குலம் கிறீம் ஹவுஸ்**
ஆலடிச் சந்தி, மானிப்பாய். (C/21939)

விக்ன விநாயகரே! வினைகள் தீர்ப்பவரே!
**A.B.கொமினிக்கேசன்**
நவாலி வடக்கு, மானிப்பாய். T.P.2156. (C/21946)

# வெளிநாட்டுப் பணத்தில் ஆண்டவனையே சிலர் விலைக்கு வாங்க நினைக்கின்றனர்

## ஆதீனத்தில் நடந்த கருத்தரங்கில் பேராசிரியர் சிற்றம்பலம்

வலி.தெற்கு,ஏப்.29

வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டு ஆண்டவனையே விலைக்கு வாங்க சிலர் நினைக்கிறார்கள். 'நான்' என்ற அகங்காரமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணம். ஆணவப் போக்கைக் கைவிட்டு எமது சமயத்தின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவோம்.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நடத்திய கருத்தரங்கில் சைவ ஆலய பரிபாலனம் பற்றி உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தில் நடைபெற்ற 'சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும்' பற்றிய இக்கருத்தரங்கு இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் நடைபெற்றது.

ஆகம விதிகளை துணிந்து கூறக்கூடிய குருமார் பரம்பரை அவசியம். இதற்காக நிறைவான குருமார் பயிற்சிக் கலாசாலை ஒன்று தேவை. அதனை யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலையில் அமைக்கலாம் என்றும் பேராசிரியர் சிற்றம்பலம் அங்கு குறிப்பிட்டார்.

அவர் அங்கு வழங்கிய கருத்துரையின்போது மேலும் கூறியதாவது:-

என்ன நோக்கத்துக்காக ஆலயங்கள் அமைக்கப்படுகின்றனவோ அவற்றை செம்மையாக நடத்த முடியாத ஒரு நிலை இன்று தோன்றியுள்ளது. 'நான்' என்ற அகங்காரமே இன்றைய ஆலயப் பிரச்சினைகளுக்கு மூலகாரணம்.

வழிபடுவோர், பரிபாலனசபையினர், குருமார் ஆகியோர் ஒரு பக்குவ நிலையில் ஆலய பணிகளை மேற்கொண்டால் பிரச்சினைகள் வரா.

ஆலயங்கள் மீது உரிமை கொண்டாடுவது, நேரகாலத்துப் பூஜை முறைகள், திருப்தியான தெட்சணை வழங்குதல் போன்ற காரணங்களால்தான் பிரச்சினைகள் எழுகின்றன.

வெளிநாடுகள் சென்றவர்கள் அனுப்பும் பணத்தைக் கொண்டு ஆண்டவனையே விலைக்கு வாங்க சிலர் நினைக்கிறார்கள். சிறுசிறு கோயில்களையெல்லாம் மஹோற்சவ கோயில்களாக்குகின்றார்கள். தற்போது பணம் அனுப்பும் தலைமுறை கழிய பணவளம் வற்றிவிடும். அப்போது ஆலயங்களைப் புனரமைக்க, வழிநடத்த, பராமரிக்க பணம் இன்றி கஷ்டநிலை ஏற்படும். இவற்றை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இந்தியா போன்ற இடங்களுக்கு பிராமணச் சிறுவர்களை அனுப்பி பயிற்சிபெற வைத்தல், உள்ளூரில் பயிற்சி வழங்கல் போன்றவை மூலம் கல்வி அறிவுமிக்க குருப் பரம்பரையை தோற்றுவிக்கவும் அவர்கள் மூலம் சைவ பாரம்பரிய விழுமியங்களை பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கொடுப்பதன் மூலம் எமது சமயத்தை வளர்க்க முடியும் - என்றார்.

### ஆணவம் வேண்டாம்

'ஆலய நிர்மாணம்' பற்றிக் கருத்துரை வழங்கிய கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் கூறியதாவது:-

மேல்நாட்டு அறிஞர்கள் பலர் எமது ஆலய நிர்மாண விடயங்கள் பற்றி பலவாறு வியந்து கூறியுள்ளனர். ஆகம, வாஸ்து, சிற்ப சாஸ்திர விதிமுறைகளுக்கு அமைய ஆலயங்கள் அமைக்கப்பட வேண்டும். ஆகம விதிகளை மாற்றி அமைக்க எமக்கு அதிகாரம் இல்லை. எம்மிடையே உள்ள ஆணவத் தன்மை, பொறாமை உணர்வு, தற்பெருமைகளை வெளிக்காட்டிக் கொள்ள ஆலயங்களை கருவிகளாக பயன்படுத்தக்கூடாது. ஆலய நிர்மாணத்திலே பரிபாலன சபையினர் - ஸ்தபதி சிவாச்சார்யர்களிடைய ஒத்திசைவான கருத்து இருக்க வேண்டும். புதிய ஆலயங்களை நிர்மாணிப்பதை விட இருக்கும் ஆலயங்களை புதுப்பித்து சிறப்பாக பூசைகளை மேற்கொள்வது கூடிய பலனைத்தரும்.

ஸ்ரீரங்கத்திலே 262அடி உயரமான தெற்கு கோபுரம் அமைப்பதில் பலருடைய ஒத்துழைப்பும் கூட்டு முயற்சியும் காணப்பட்டது போல ஒவ்வொரு ஆலய அமைப்பிலும் கூட்டுமுயற்சி தேவை.

நம்மிடையே உள்ள கோபதாபங்கள் நீங்கி சமத்துவம் - புரிந்துணர்வு நிலைகள் ஏற்பட்டு நாம் செய்வது ஆலயப் பணியே என்ற மனநிலை அனைவரிடமும் ஏற்பட வேண்டும். அப்போது எம்மிடையே பிரச்சினைகள் எழ மாட்டா - எனறார்.

### சலுகைகளுக்காக மதம் மாறுவதா?

இந்நிகழ்வில் ஆசியுரை நிகழ்த்திய மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் கூறியதாவது:

வசதிகள், சலுகைகளைக் காட்டியும் பல்வேறு காரணங்களை முன்வைத்தும் மக்கள் மதம் மாற்றப்படுவது கண்டிக்கப்பட வேண்டும். அது மட்டுமின்றி இத்தகைய செயலில் ஈடுபடுவோர் குறித்து மக்கள் மிகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மிகக் குறைந்த வீதத்தினரே கிறிஸ்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஏனையோரையும் மதம் மாற்றிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டி செயற்படுவோரின் நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியவை - என்றார்.

### ஆலயப் பிரச்சினைகள் ஏன் நீதிமன்றுக்கு?

தொடக்க உரையாற்றிய இளைப்பாறிய நீதிபதி க.திருநாவுக்கரசு கூறியதாவது:-

உலகில் 33 நாடுகளில் சைவமும் தமிழும் வாழ்ந்தாலும் யாழ்ப்பாணத்தில்தான் அவை முறைப்படி பேணப்படுவதாக 1953ஆம் ஆண்டு யாழ்.வந்த ரா.பி.சேதுப்பிள்ளை, தவத்திரு.குன்றக்குடி அடிகளார், கி.வ.ஜகநாதன், ச.ச.ஞானசம்பந்தன் போன்ற அறிஞர்கள் பாராட்டினர். ஆனால் இன்று அந்தநிலை முற்றாக மாறிவிட்டது.

நாவலருக்குப் பின் சீரான முறையில் இந்து மதத்தை வளர்க்க எந்த நிறுவனமும் முயற்சிக்கவில்லை. 50 ஆண்டுகளுக்கு முன் கோயில் வழக்கு எதுவும் நீதிமன்றம் செல்லவில்லை. இன்று பல ஆலயங்கள் வழக்குக் காரணமாக பூஜைகள் இன்றி பூட்டிக் கிடக்கின்றன. எமது சமயப் பிரச்சினைகளை நீதிமன்றம் கொண்டுசெல்லாது புரிந்துணர்வுடன் நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் தமது கருத்துரையில் இன்றைய இளம் சிவாச்சார்யர்கள் வகுப்பறைக் கல்வி அறிவுடன் குருகுலக் கல்வி கற்றுத் தேர்ச்சி அடைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். பல்கலைக் கழக மட்டத்தில் இருந்து சிவாச்சார்ய மரபுகள், ஒழுக்க நெறிகள் பேணப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக பட்டத்துக்கு சமனாக தகுதிவாய்ந்த பட்டம் சிவாச்சார்யர் களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது - என்றார்.

மாவை சு.து.சுந்தரமூர்த்திக் குருக்கள் ஆகமங்களையும் சிவாச்சார்யர்களின் சொற்களையும் சைவ மக்கள் என்று புறந்தள்ளி வைக்கத் தொடங்கினார்களோ அன்றே எமது சமயம் வீழ்ச்சி அடையத் தொடங்கிவிட்டது. ஆகமம் எமது சட்டவிதி நூல். அவற்றை நடைமுறைப்படுத்தும் சிவாச்சார்யர்களின் சொற்கேட்டு நடந்தால் நாட்டின் அமைதி ஏற்பட்டு சாந்தி - சமாதானம் நிலவும் எனக் கூறினார்.

### எமது பண்பாட்டுக்கு மாறான செயல்கள்

இந்து சமயப் பேரவைத் தலைவர் சீ.விநாசித்தம்பி தமது தலைமையுரையில் புறச் சமயங்களின் பண்பாடுகள் எமது சமயத்துள் புகுந்துள்ளன. 'கேக்' வெட்டுவது, மெழுகுவர்த்தி அணைப்பது இந்து சமயப் பண்பாடு அல்ல. வெட்டுவதும் விளக்கு அணைப்பதும் எமது பண்பாடுகளுக்கு மாறான செயல்கள். புறசமயங்களின் பண்பாடுகளை நாம் இகழவேண்டாம். எமது மககளை புறம்போகவிடாது, சைவநெறி முறையில் வாழவைக்க செய்ய வேண்டும் எனக் கூறினார்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

சைவ குருமார் அர்ச்சகர் சபையைச் சேர்ந்த சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள், சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் மற்றும் சி.சக்திகிரீவன், பேராசிரியர் நா.ஞானகுமாரன் ஆகியோரும உரையாற்றினர். (க-எ-13-152)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கடந்த வருடம் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் பேச்சுப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் கி.ஜங்கரன் இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜெயவீரவிடமிருந்து விருதினைப் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும் -

குழுப்பாடல் நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலையின் சார்பில் மாணவியொருவர் விருதினைப் பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (எ)

## சித்தன்கேணி பிள்ளையாருக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

சித்தன்கேணி - பெரியவளவு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் இன்று காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது. ஸாகித்திய சிரோன்மணி சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசாமிக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். கடந்த 14ஆம் திகதி முதல் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற்று வந்தன.

விநாயகப் பெருமான் அடங்கிய ஓம் சொரூப படமும், நாள்காட்டியும் கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொள்ளும் அடியவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். (எ)

## 'அ','இ' அட்டைகள் மீளாய்வு

குடாநாட்டிலுள்ள பிரதேச செயலகப் பகுதிகளில் சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் அ, இ நிவாரண அட்டைகளுக்கான மீளாய்வுகள் நடைபெற்றுவருவதால் அந்த அட்டைகளை வைத்திருப்போர் தத்தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீளாய்வு செய்யப்பட்ட அட்டைகளுக்கே ஏப்ரல் மாத நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-180)


பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின்

மணிவிழாக்கால ஆய்வேடு வெளியீடும் சமூகப்பணியும்

காலம்: இன்று (29.04.2002) திங்கட்கிழமை மாலை 4.00 மணி

இடம்: கைலாசபதி கலையரங்கம்

தலைமை: செல்வி எஸ்.காயத்திரி (தலைவி, சமூகவியல் சமூகம்)

நிகழ்வுகள்

★ மங்களதீபம் ஏற்றல் ★ பாரதியின் வேண்டுதல்
★ வரவேற்புரை: செல்வன் எம்.மதனமோகன் (உபதலைவர், சமூகவியல் சமூகம்)
★ தலைமையுரை
★ வாழ்த்துரைகள்: கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்
உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ்
★ ஆய்வேடு வெளியீடு: Trincomalee: Geo politics, ethnic dimension and development potential
★ வெளியீட்டுரை: கலாநிதி என்.சண்முகலிங்கன் (பெருந்தலைவர், சமூகவியல் சமூகம்)
★ சமூகப்பணிக் களங்கள்: காட்டுப்புலம் அ.த.க.பாடசாலை சிறார்கள், மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை அகதிமுகாம் முதியோர் வாழ்வகம் சிறார்கள்.
★ மாணவர் நயப்புரை
★ துணைவேந்தர் சிறப்புரை
★ தாகூரின் கீதாஞ்சலி
★ நன்றியுரை செல்வி ஏ.நிலானி

அனைவரையும் அன்புடன் அழைக்கும்:
சமூகவியல் சமூகம்
யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

விளம்பர அன்பளிப்பு: திரு.க.ஜெயக்குமார் 'ஜெயா போட்டோ' ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.

(3279)


## புலமைப்பரிசில் கொடுப்பனவை விரைவில் வழங்க நடவடிக்கை

வலி.தெற்கு,ஏப்.29

2002ஆம் ஆண்டு முதலாம் தவணைக்குரிய, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை விரைவில் வழங்க வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கான வேலைகள் வலிகாமம் கல்வி வலயத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசிலுக்கான இவ்வருட முதலாம் தவணைக் கொடுப்பனவுகளுக்குரிய கொடுப்பனவுப் பத்திரங்களை இது வரை பல பாடசாலைகள் கல்வி வலயத்துக்கு அனுப்பிவைக்கவில்லை என்றும் -

கொடுப்பனவுப் பத்திரத்தை ஒப்படைக்காத பாடசாலை அதிபர்கள் உடனடியாக அவற்றை அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் 2001ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் யாவும் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டு விட்டதாகவும், இவ்வருட முதலாம் தவணைக் கொடுப்பனவுகளும் விரைவில் கொடுத்து முடிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-152)

## கோவிலாக்கண்டி பாடசாலை நாவற்குழியில்!

யாழ்ப்பாணம்,ஏப்.29

கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் இன்றுமுதல் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இயங்கவுள்ளதாக வித்தியாலய அதிபர் செ.முத்துலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலை மாணவர்களின் பெயர் விவரங்களை பெற்றோர்கள் இன்று பாடசாலையில் பதிவு செய்துகொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (எ)

## நாவற்குழி ம.வி சொந்த இடத்தில்!

நாவற்குழி மகா வித்தியாலயம் இன்றுமுதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாக வித்தியாலய அதிபர் பி.முத்துலிங்கம் அறிவித்துள்ளார்.

இடப்பெயர்வுக்குப் பின்னர் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் மேற்படி பாடசாலை இயங்கிவந்தது. (எ)

## விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

திருமலை கமநல சேவைப் பகுதியினரால் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் அப்பகுதி விவசாயிகளுக்கு கடனடிப்படையில் சுழற்சி முறையில் நீரிறைக்கும் இயந்திரங்கள் தற்போது விநியோகிக் கப்பட்டுவருகின்றன. (க-48)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.29

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க கிளைகளின் தலைவர், செயலாளர்கள் ஆகியோருக்கான மேதினம் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் வடக்கு - கிழக்கு மாகாணசங்கத் தலைவரும் கலந்து கொள்ளவிருக்கின்றார்.

(உ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டிலான 7 பேர் பங்குபற்றும் ஹொக்கிச் சுற்றுப் போட்டி இன்று பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**பெண்கள்**

★ பிற்பகல் 3.30 மணி - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் ஈகிள் ஸ்ரார் வி.க.அணி.

★ மாலை 4 மணி - உடற்கல்விப் பிரிவு அணி எதிர் யாழ். ஸ்ரார்ஸ வி.க.

**ஆண்கள்**

★ மாலை 4.30 மணி - உடற்கல்வி பிரிவு 'சிவப்பு' அணி எதிர் ஓல கோல்ட்ஸ் வி.க.அணி.

★ மாலை 5 மணி - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க.'பி' அணி.

★ மாலை 5.30 மணி - உடற்கலவிப் பிரிவு 'புளூஸ்' அணி எதிர் யாழ். பல்கலைக்கழக 'புளூஸ்' அணி.

(உ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மக்கள் வங்கி வடவலயத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் வயதுக் கட்டுப்பாடற்ற இரட்டையர்களுக்கான பட்மின்ரன் ஆட்டங்கள் இன்று மாலை 4 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.(உ-3)


## வேலணை ப.நோ.கூ.சங்கம் (வ.து)

லொறிச் சாரதி, சுத்திகரிப்பாளர் (கிளினர்) பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல் (ஒப்பந்த அடிப்படையிலானது)

**சாரதி**

| | |
|---|---|
| வயதெல்லை | 21 - 45 வரை |
| அனுபவம் | பாரவூர்தி (லொறி) செலுத்துவதில் ஐந்து வருடங்களுக்கு மேலான அனுபவம் (சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றபின்) |
| சம்பளம் | நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். |
| கல்வித் தராதரம் | எட்டாம் வகுப்பு சித்தி |
| பிணைப்பணம் | ரொக்கம் 10,000/- ஆதனப்பிணை 15,000/- |

**சுத்திகரிப்பாளர் (கிளினர்)**

| | |
|---|---|
| வயதெல்லை | 21- 45வரை |
| சம்பளம் | நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் |
| கல்வித் தராதரம் | எட்டாம் வகுப்பு சித்தி |
| பிணைப்பணம் | ரூபா 10,000/- |

விண்ணப்ப முடிவு திகதி 2002-05-10

தலைவர்,
வேலணை ப.நோ.கூ.சங்கம்.

(3280)



## அறிவித்தல்
### சாவகச்சேரி பிரதேச சபை
### கொடிகாமம்

பின்வருமாறான ஆள்சேர்ப்புக்கு சாவகச்சேரி பிரதேச சபையால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 08-05-2002ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்களை எமக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்படுகின்றது.

01. 100 நாள் வேலைத்திட்டத்தின் பிரகாரம் வீதித் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அமைய அடிப்படையிலான தற்காலிக வீதித் தொழிலாளர்களைச் சேர்த்தல்.

02. கச்சாய் தெற்கு, வினோபா சனசமூக நிலைய தையல் பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்களை சேர்த்துக்கொள்ளல்.

மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபைத் தலைமைப் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.

ந.பாலச்சந்திரன்
செயலாளர்.

அன்ரன் பொன்னையா
தலைவர்.

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்,
25-04-2002

(C/21961)


## நன்றி நவிலல்

### அமரர் நாகர் இராமலிங்கம் J.P.

(ஓய்வுபெற்ற அதிபரும், சோதிட நிபுணரும்)

எமது அன்புத் தந்தையாரின் மரணச்செய்தி அறிந்து எமக்குப் பல்வேறுவழிகளில் உதவிகளும் ஒத்தாசைகளும் புரிந்த அன்புள்ளங் கொண்டவர்களும், தொலைபேசி, தொலைநகல் தந்திமூலம் எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் 25. 04. 2002இல் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட கழகங்களுக்கும், அன்புள்ளங்களுக்கும், தந்தையாரின் இறுதி அஞ்சலி நிகழ்வை அரியாலை காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா அரங்கில் நடத்திய நிர்வாகத்தினருக்கும் அஞ்சலி உரை நிகழ்த்திய பிரமுகர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*54/1, கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்.

(3281)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் முன்னாள் செயலாளர் திரு.இ.துசிவராசா
அவர்களின் பாசமிகு மாமனாரும்
எமது சபையின் நூலகர் திருமதி கு.கனகேஸ்வரி
அவர்களின் பாசமிகு தந்தையாருமான

### கார்த்திகேசு முருகப்பா

(இளைப்பாறிய ஆசிரியர், யா/கச்சாய் அ.த.க. பாடசாலை)

அவர்களின் பிரிவால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர்,
உத்தியோகத்தர்கள்.

*சாவகச்சேரி பிரதேச சபை,*
*கொடிகாமம். 29-04-2002*

(3283)

## அச்சுவேலிக் கொலை: சகோதரர்கள் கைது!

அச்சுவேலி,ஏப்.29

அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக இரண்டு சந்தேக நபர்கள் அச்சுவேலிப் பொலீஸால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி வடக்கு சித்திரவேலாயுதர் கோயில் திருவிழா உரிமை தொடர்பான பிரச்சினையால் கொடி இறக்கத் திருவிழாவின்போது ஆலய வெளிவீதியில் வைத்து வைரவி சுபாஸ் (வயது 51) என்பவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக புலன்விசாரணை செய்துவரும் அச்சுவேலிப் பொலீஸார் சகோதரர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர். ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மேலும் இரண்டு பேர் தேடப்பட்டுவருவதாக அறியப்படுகின்றது. (உ-11)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை எழுதிய 'திருகோணமலை புவிசார் அரசியல், இனத்துவ பரிமாணங்கள், மேம்பாட்டு வல்லமை' என்னும் அவ்வேட்டின் வெளியீட்டு வைபவம் இன்று மாலை 4மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது. (உ-3)


ராஜா யாழ்ப்பாணம்
3ஆவது ஜனத்திரள் வாரம்
விஜய், பிரியங்கா சோப்ரா,
விவேக நடித்த
தமிழன்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C/21731)

லஷ்சுமி இணுவில்
2ஆவது வாரமாக
சரத்குமார், அபிராமி, கவுண்டமணி
சமுத்திரம்
(நீலம்)
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(3282)

நாகம்ஸ் சுன்னாகம்
ஜனத்திரள் நிறைந்த
4ஆவது வெற்றி வாரத்தை நோக்கி
ரொப்ஸ்டார் பிரசாந்த்,
சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ்
(நீலம்)
(3744)

நிரஞ்சனாஸ் சங்கானை
அஜித், ஷாலினி, ரகுவரன்
நடித்த
அமர்க்களம்
(நீலம்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)


# மரண அறிவித்தல்கள்

## கணபதி ஜீவகாருண்யம்

**(உதவி முகாமையாளர்,**
**இலங்கைப் போக்குவரத்துச் சபை, காரைநகர் சாலை)**

காம்ப் வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 187, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி ஜீவகாருண்யம் அவர்கள் நேற்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*187, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ச.பசுபதி
(சிறிய தந்தை)

(3286)

## திருமதி செல்வரத்தினம் செல்வராணி

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் செல்வராணி (பிருந்தா) அவர்கள் 26.04.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் ஜெனாத்தனன், செல்வநாத், அனாத்தனன், அரிச்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும் முருகேசு - பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் வைகுந்தவாசன் (லண்டன்), முகுந்தா ஜெயசோதி (கொழும்பு), ரங்காதேவி கனகநாதன் (கனடா), வைகுண்டதேவி, கிருஷ்ணதேவி துரைராஜா (மூளாய்), ஜெயதேவி ரகுநாதன் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் நாகேஸ்வரி இரத்தினசிங்கம் (லண்டன்), நகுலாம்பி ஜீவரட்ணம் (மாதகல்), நவரட்ணம், நாகலிங்கம், கருணாகரன் (சுவிஸ்), நவல்லா வரதராஜா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2002) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் கிழக்கு,*
*சுழிபுரம்.*

தகவல்:
நா.செல்வரத்தினம்
(கணவர்)

(3285)

## திருமதி இராசம்மா சுப்பிரமணியம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசம்மா சுப்பிரமணியம் நேற்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் (முன்னாள் இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவாளர்) அன்பு மனைவியும் சேயமாம்பிகை, சேய்மானந்தன் (ந.ப.நோ.கூ.சங்கக் கிளை மேற்பார்வையாளர்), சுனேசானந்தன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, நீர்வேலி), லிங்கேஸ்வரன், பிரமானந்தன் (புத்தளம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் பரமேஸ்வரி (கிராமசேவையாளர், J/111), திலகவதி, சாந்தி (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பதிவுகாரர் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பிள்ளைகள்.

(3288)

## திருமதி வேதநாயகம் பிலோமினா
**(நல்லம்மா)**

இல.215, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 25, பற்றிக்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லம்மா என அழைக்கப்படும் திருமதி வேதநாயகம் பிலோமினா 09.04.2002 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் பிரான்சிஸ்பிள்ளை சிசிலியாவின் கனிஷ்ட புத்திரியும் இராமலிங்கம் வேதநாயகத்தின் (லண்டன்) அன்பு மனைவியும் லெக்ஸ் பிராங்கிளின் (கனடா), நசற்ஜின்னா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி அந்தோனிப்பிள்ளை றோசறி மரியம்மாவின் அன்புச் சகோதரியும் யோசவ், பெஞ்சமின், சத்தியதாசன், திருமதி நிர்மலா குருஸ், குணரட்ணம், சகாயதாசன், ஆசுதாசன், விமலசேகரம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பிரியாவிடைத் திருப்பலி லண்டன் புனித ஜோர்ஜ் பேராலயத்தில் இன்று (29.04.2002) திங்கட்கிழமை ஒப்புக்கொடுக்கப்பட்டு கம்பர்வெல் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இன்று (29.04.2002) திங்கட்கிழமை மாலை 5.00மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*215, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியன்
(அண்ணன்)

(3284)

## வீரசக்தி திரவியம்

அரியகுளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசக்தி திரவியம் நேற்று (28.04.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் குணவதியின் அன்புக் கணவரும் யசிதா, பாமா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் K.இந்திரகுமாரின் (அமெரிக்கா) மாமனாரும் காலஞ்சென்றவர்களான ராசதுரை, மகான் மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் சகோதரனும் திரவியம் (சாமியார்), அழகைக்கிளி, சரோஜினிதேவி (சுவிஸ்), சுசிலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் மகாலிங்கம் (சுவிஸ்), செல்வம் (சுவிஸ்) ஆகியோரின் மச்சானும் மாணிக்கம் - பூமணியின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2002) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*82/9, பருத்தித்துறை வீதி,*
*3ஆம் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(3290)

## வடக்கிற்கு புதிய தளபதி

யாழ்மாவட்ட படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பதவியேற்கவிருக்கின்றார்.

தற்சமயம் யாழ். மாவட்டத் தளபதியாகப் பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரியா இடமாறம் பெறவிருக்கின்றார். (உ-3)

## முஸ்லிம் காங்கிரஸ் குழு புலிகளுடன் பேச்சு

மட்டக்களப்பு,ஏப்.29

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் அமைச்சருமான மொகைதீன் அப்துல் காதர் தலைமையிலான குழு ஒன்று விடுதலைப் புலிகளின் குழுவுடன் நேற்று புலிபாய்ந்தகல் பகுதியில் வைத்து பேச்சுக்களை நடத்தியது. (உ-3-9)


G.C.E. A/L விற்பனையாகின்றது

2002 A/L



பொதுச் சாதாரணப் பரீட்சை அதிகாரப்பூர்வமானது

* பரீட்சார்த்திகளுக்கான முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்
* 3 வினாத்தாள்கள் விடைகளுடன்
* 2002 APR. வரையான சகல பொது அறிவு விடயங்களும்

திருத்திய 5ஆம் பதிப்பு

ஆக்கியோர்:
P.கமலதாசன் &
P.உமாசங்கர். (3289)


## பாலசிங்கம் பயணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் படகுகளில் வெடிமருந்துகள், ஆயுதங்கள் நிறைய இருந்தன என்றும் பொட்டு அம்மான் உட்பட கிழக்குத் தலைவர்கள் பலர் அதில் உள்ளனர் என்றும் கடற்படைக்குத் தகவல் கிடைத்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்த இழுபறி ஒரு புறம் நடந்து கொண்டிருக்க பாலசிங்கம் தம்பதியர் பயணம் செய்த கடல் விமானமும் மாலைதீவுக்கு செல்வதற்கு வழமைக்கு மாறாக கிழக்கில் திருமலைப் [illegible] நாட்டை [illegible] வெளியே [illegible] கொண்டிருநதது.

புலிகளுடையவை என்று சந்தேகிக்கப்பட்ட படகுகளைச் சுற்றி வளைத்து நின்ற கடற்படையினர், கிழக்கு கடலுக்கு மேல் மர்ம விமானம் ஒன்றை அவதானித்ததும் அவர்களது சந்தேகம் பலமடங்காகியது.

உடனே விமானப் படைக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. விமானப் படை தாக்குதலுக்கு கிளம்பத் தயாராகியது. அதற்கு முன்னர் கொழும்பிலுள்ள விமானப் படை தலைமையின் அனுமதி கோரப்பட்டது.

கொழும்பு விமானத் தலைமை 'விமானம் போகட்டும்: விட்டுவிடுங்கள்' என்று கூறியது. அதனால் பெரியதொரு ஆபத்து நீங்கியது. பாலசிங்கம் தம்பதியர் பயணம்செய்த விமானம் மீது தாக்குதல் நடத்துவது தவிர்க்கப்பட்டது.

என்றாலும் இந்த விஷயம் கொழும்பின் உயர் மட்டத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. கொழும்பில் உள்ள சமாதானச் செலயகம் இது சம்பந்தமாக நோர்வேயுடன் தொடர்புகொண்டு வருகிறது.

இனிமேல் பாலசிங்கம் வன்னிக்கு வரும்போதும் திரும்பும்போதும் அவரது கடல் விமானத்தின் பயணநேரம் மற்றும் பயணப்பாதை ஆகியவற்றை முன்கூட்டியே அறிவிக்கும்படி நோர்வேக் குழு மூலம் புலிகளைக் கேட்டுக்கொள்ளப்போவதாக பிரதமர் ரணில் 'கல்ப் நியூஸ்' பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கிடையில் -

திருகோணமலை 'பவுல் பொயின்ற்' பகுதியில் அன்றையதினம் கடற்படை முற்றுகை இடம்பெற்றதை பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால் அதில் சிக்கியவர்களில் புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் அடங்கியிருக்கவில்லை என்றும் -

புலிகளின் படகுகளுக்குள் இருந்தவர்களில் கடற்புலிகளின் கிழக்குத் தளபதியான திக்கன் என்பவர் மட்டுமே புலிகளின் உயர்மட்டத் தலைவர் என்றும் -

பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது. (உ-6-9)

## படையினரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்டத்துக்கு 16 பேரும் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குப் புறப்பட்டுச் செல்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தீவகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதேபோல இரண்டாவது தொகுதியாகச் செல்லும் விடுதலைப் புலிகளும் அவற்றை எடுத்துச்செல்ல அனுமதிக்க வேண்டும் - இவ்வாறு புலிகள் மேலும் கோரியுள்ளனர். (உ-9)

## துரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமயம் மண்டூர் சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் இருந்து மூன்று ரவைகளும், இராணுவச் சீருடை ஒன்றும் மீட்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்திருந்தனர்.

காத்தான்குடி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் விடுவிக்கப்பட்டார்.

நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையின்பேரிலேயே அவர் விடுவிக்கப்பட்டார்.

அவரோடு கைது செய்யப்பட்ட மூன்று பொதுமக்களும் இதே நிபந்தனையின் கீழ் விடுவிக்கப்பட்டனர். (உ-3)

## திருமலை ஊர்வலத்தில் கைகலப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைக் கைதுசெய்து இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று திருமலையில் பொதுமக்கள் அமைப்புகள் ஊர்வலம் ஒன்றை நடத்தின.

ஊர்வலம் சென்றுகொண்டிருந்த வேளை அந்த ஊர்வலத்தில் சென்ற ஆட்டோக்களின் இலக்கங்களை இரகசியப் பொலீஸார் குறித்துக் கொண்டிருந்தனர். இதில் தலையிட்ட இளைஞர்களுக்கும் இரகசியப் பொலீஸாருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. ஊர்வலமும் ஸ்தம்பித்தது. அதன் பின்னர் 5 இளைஞர்களைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

## அரசமைப்புச் சீர்திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாக அமையும்.

அத்தோடு பிரதமர் மற்றும் சபாநாயகரின் கலந்தாலோசனையின்றியே தாம் விரும்பிய நேரத்தில் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைக்கவும், கூட்டவும், ஜனாதிபதிக்கு தற்போது இருக்கும் அதிகாரத்தையும் உத்தேச சட்ட மூலம் விலக்கும் என்று தெரிகின்றது.

நாடாளுமன்றத்தில் கட்சி முடிவுக்கு மாறாக மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் எம்பி ஒருவரை அதற்காக எம்.பி. பதவியிலிருந்து விலக்குவதற்கு சம்பந்தப்பட்ட கட்சிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரமும் உத்தேச சீர்திருத்தத்தின் கீழ் நீக்கப்படும்.

இந்த அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிரணியில் - பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தரப்பில் - இருக்கும் பல எம்.பிகளின் ஆதரவு இருப்பதாக கூறப்படுகின்றது.

எது எப்படியென்றாலும் அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டம் என்பதால் அது நிறைவேறுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு - அதாவது 150 எம்.பிக்களின் ஆதரவு தேவை.

ஆனாலும் ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் தமிழ்க் கட்சிகள் இந்த அரசமைப்புச் சீர்திருத்த சட்டத்தை ஆதரித்தாலும், எதிரணியில் உள்ள பொ.ஐ. முன்னணி மற்றும் ஜே.வி.பி. தரப்பில் இருந்து மேலும் 18 எம்.பிக்களின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே இச் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6-9)


**கண்டெடுக்கப்பட்ட தங்க நகைகள்**

எமது வங்கிக் கிளையில் கைவிடப்பட்ட ஒரு தொகுதி நகைகள் கண்டெடுக்கப்பட்டு முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

*குறிப்பு:* இவை புத்தம்புதிய நகைகளாக இருப்பதனால் நகைத் தொழிலாளரும் கவனத்தில் கொள்ளவும்.

இலங்கை வங்கி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. -2636
2760

முகாமையாளர்.

(C/21959)

**CHEMISTRY CENTRE**

83,பலாலி வீதி, கந்தர்மடம்.

வரிசை மாற்றம்
சேர்மானம்
THU. - 1.30 - 2.30
FRI. - 12.30 - 1.30
ஆரம்பம் - 02.05.2002
ப.செந்தில்நாதன் (3275)
A/L 2004 Chemistry
பிரிவு II Fri. - 11.30 - 12.30
By. அன்பழகன்

**தொடர்பு கொள்ளவும்**

யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிலை, வெங்காயம், இறால் மற்றும் உற்பத்திப் பொருள்களை லொறி மூலம் கொழும்புக்கு அனுப்ப விரும்புவோர் உடன் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (C/21963)

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 2024/2025
*கிளை:* மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
167, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ITP JAFFNA SRI LANKA

**தகவல் தொழில்நுட்பப் பூங்கா**

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

**INFORMATION TECHNOLOGY PARK**

Established by RRAN-UNDER THE AUSPICES OFMinistry of Rehabilitation, Resettlement & Refugees

RRAN

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் இரண்டாம் வருடத்திற்குரிய கணனிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் செயற்திட்டங்களில் விரும்பியவற்றில் இணைந்து கொள்வதற்குரிய விண்ணப்பப்படிவங்களை 02-05-2002 தொடக்கம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**Certificate Courses** — 2 months
* MS-Word * MS-Excel * MS-Access
* PageMaker * Corel Draw * AutoCAD

Fee: 700/=

**Certificate Courses** — 3 months
* VisualBasic * Java * Hardware
* Internet & e-mail * C++
* WebPage Designing & Development

Fee: 1500/=

**Diploma Courses** — 5 months

| Course Title | Fee |
|---|---|
| Diploma in MS-Office | 2800/= |
| Diploma in Destop Publishing | 2400/= |
| Diploma in Hardware Technology | 3200/= |
| Diploma in Software Development | 4750/= |
| Diploma in Information and Communication Technology | 4750/= |

சகல பயிற்சிநெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் ரூபா 250/=

தகவல்: பணிப்பாளர். (C/21960)

**ON-LINE COURSE**
**Diploma in PC Application & Office Management**
வார நாள்கள் மட்டும் -
காலை, மாலை- இரு பிரிவுகள்.

2 Months Fee 2000/= only.

விண்ணப்பப் படிவங்களும், பதிவுகளும்
May மாதம் 2ம் திகதி தொடக்கம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தவணைக்கட்டணம் செலுத்தும்போது மாணவர்கள் இணைந்து கொள்கின்ற பிரிவுகளுக்குரிய நேர அட்டவணை வழங்கப்படும்.

பயிற்சிநெறிகள் ஆரம்பம் :-22-05-2002

**Certificate** கற்கைநெறிகளுக்கான கட்டணங்கள் முழுமையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

**Diploma** கற்கைநெறிக்கு மாத்திரம் இரு தவனைகளில் கட்டணங்களைச் செலுத்தலாம்.

**On-Line Certificate Course** இற்கான கட்டணங்கள் யாவும் முன்கூட்டியே செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.04.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.